விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 219 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 10 புதன்கிழமை (26.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சாவதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு

### ஐ.நா பிரதிநிதியிடம் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மக்களின் நீண்டகாலப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதும் இனங்களுக் கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத் தவும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளரிடம் தெரி வித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் 15



### நல்லூருக்குள் அனுமதித்தமை

## மத நல்லிணக்கத்துக்கு ஆரம்பப் புள்ளியாகும்

### யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்திற்குள் கத்தோலிக்க மதகுருவை அனு மதித்தமை மத நல்லிணக்கத் திற்கான ஆரம்பப் புள்ளியாக பார்க்கின்றோம் என யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் தெரி வித்தார்.

வரலாற்றுப் பிர 15

## சுழிபுரத்தில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரத்தில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட் கப்பட்டுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சின்னையா கந்தசுவாமி என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 15

# ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சி மாநாடு இன்று

- 13ஆவது திருத்தம் தொடர்பில் முடிவு.
- காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடல்.
- பல முக்கிய முடிவுகள் எட்டப்படலாம்.
- ஜே.வி.பி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூட்டத்தைப் புறக்கணிப்பு.

தேசியநல்லிணக்கம்தொடர பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவினால் சர்வகட்சி மாநா டொன்றுக்கு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது.

இன்று மாலை 5 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற வுள்ளதாக ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

13ஆவது திருத்தம் தொடர பிலும் இங்கு கலந்துரையாடப் படவுள்ளது.

இந்த கூட்டத்தில் பாராளு மன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகள் பங்கேற்பதாக பொதுச் செய லாளர் குறிப்பிட்டார்.

இதனிடையே, சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளா திருக்க தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக பாராளு மன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறினார்.

சர்வகட்சிமாநாட்டில் கலந்து கொள்வது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் தங்களின் நிலைப்பாட்டினை அறிவித்துள்ளன. 16

## ஒன்லைன் கடவுச்சீட்டு பெறுவதில் சிக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிப்போர் ஒன்லைன் மூலம் கடவுச் சீட்டினைப் பெற்றுக் கொள்பவர் 16

## ஐ.எம்.எப் திட்டம் யாழில் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

அரசின்புதியவரிக்கொள்கை மற்றும் ஐ.எம்.எப் நிகழ்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்து வது மற்றும் அரச வருமானம் மற்றும் பொருளாதார ஈட்டல் முன்னேற்ற உறுதிப்பாடு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடை பெற்றது.

மத்திய வங்கியின் உதவிப் பணிப்பாளர் பரணவிதான, வடக்கின் ஆளுநர் திருமதி சார்ள்ஸ், 16

## 13ஐ அமுலாக்கும் நிலைப்பாட்டில் சுதந்திரக் கட்சி உறுதி - தயாசிறி

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்த வேண் டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருப்பதாக அக்கட்சியின் பொதுச் செயலா ளர் தயாசிறி ஜயசேகர தெரி வித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2015, 2019ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பை ஸ்தா பிக்கும் பணிகள் இடம்பெற்ற போதும், காணிமற்றும்பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் போது மட்டும் அவதானத் துடன் செயற்பட வேண்டும் என்று தெரிவித்திருந் தோம். 15

### சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்போம்



## ஏமாற்று வித்தை காட்டினால் உடன் வெளியேறுவோம் - சஜித்

(கொழும்பு)

"ஜனாதிபதியுடனான சர்வ கட்சி கலந்துரையாடலில் நாட் டையும் மக்களையும் பற்றி சிந்தித்து எதிர்க்கட்சி பங்கேற் றாலும், இந்தக் கலந்துரை யாடல் வழமையான அரசியல் ஏமாற்று வித்தை என்று கரு தும் பட்சத்தில் அந்நிமிடமே குறித்த கலந்துரையாடல் மேசையை விட்டு வெளியேறுவோம்" என 15

### தமிழ் அரசியல் கைதிகள் போன்று

## இராணுவ வீரர்களையும் விடுதலை செய்யுங்கள்

### ர்ணிலிடம் நாமல் எம்.பி

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளை போன்று சிறையில் இருக்கும் முன்னாள் இராணுவ வீரர் களையும் விடுதலை செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி குண்டுத் தாக்குதல் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி




## மணிவண்ணன் லக்ஷிகா

மலர்வு 21.12.2004 உதிர்வு 28.07.2020

திதி: நவமி

நாம் மறக்கவில்லை
மகளே லக்ஷியம்மா
பொன்னான உன் சிரிப்பும்
பூரித்த உன் முகமும்
தினமும் எம் முன்னே
தோன்றுதம்மா...
ஆண்டுகள் மூன்றானதம்மா
ஆறாது எம் துயரம்
நாம் மாண்டுபோகும் வரை
மாறாது எம் துயரம்
என்றும் உன் நினைவுகளோடு
வாழும் குடும்பத்தினர்.

(16515)

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
(துர்க்கா ஸ்ரோர்ஸ் ஏழாலை)

# நின் சேவை நயப்பில்

திருமதி பத்மாவதி எவலின்
ஜெனற் டொறிங்ரன் SLTAS I
ஆசிரிய ஆலோசகர் (ஆரம்பக் கல்வி)



எண்ணையும் எழுத்தையும் இளமையில் பதித்து
மூன்றரை தசாப்தமாய் கருத்துடன் உழைத்து
ஆசிரியனாய், ஆலோசகனாய் ஆற்றிய பணியை
நயந்து நாம் உம்மை வாழ்த்துவதோடு
ஓய்வது என்றும் மகிழ்ச்சியாய் அமைந்திட
இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோமே

17.08.1988 - 1991 - யா/புங்குடுதீவு றோ.க.த.க
1991 - 1992 - கோப்பாய் ஆசிரிய கலாசாலை
1993 - 1995 - யா/நாரந்தனை கணேசா வித்தி.
1995 - 1996 - யா/சின்னமடு றோ.க.வித்தி.
1996 - 2000 - யா/நாரந்தனை கணேசா வித்தி.
2001 - 2010 - யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தி.
2011 - 2023.07.26 - வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலக
நலன்புரிச் சங்கம்

(C-6968)

# சரத் வீரசேகராவை வைத்து உன்னை தூக்குவேன்

## வவுனியாவிலிருந்து யாழ் இளைஞனுக்கு தொலைபேசியில் மிரட்டல்; பொலிஸில் முறைப்பாடு

சரத்வீரசேகராவை வைத்து உன்னை தூக்குவேன் இல்லாமலும் செய்வேன் என வவுனியாவிலிருந்து யாழ். இளைஞன் ஒருவருக்கு தொலைபேசியில் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் குறித்த இளைஞனால்யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குறித்த இளைஞன் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் உள்ள குறித்த நபரின் உறவினருக்கு 2 இலட்சம் ரூபாய் கடனாக கொடுத்த நிலையில் அதனை தருமாறு பலமுறை கேட்டும் வழங்காத நிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன். மேற்படி புகார் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் சம் பந்தப்பட்டவர்களுக்கு விசாரணைகள் மேற்கொள்ள அழைப்பு விடுத்த பின்னர் வவுனியா நபர் தொலைபேசியில் என்னை தொடர்பு கொண்டு தனக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதாகவும் தனக்கு பாராளுமன்ற உறுப்பினர்சரத்வீர சேகராவுடன்தொடர்பு உள்ளதாகவும் தான் அவருக்கு என்னைப் பற்றி தவறாக கடிதம் ஒன்றை அனுப்பி என்னை இல்லாமல் செய்து விடுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் தனக்கு பல அடியாட்கள் குழு இருப்பதாகவும் அவர்களை கொண்டு வந்து என்னை கொலைசெய்து விடுவேன் என்றும் அச்சுறுத்தல் விடப்பட்ட நிலையில் எனக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது என்றார். (ம-7.104)

# மரண அறிவித்தல்



தோற்றம் 1944 . 08 . 11

மறைவு 2023 . 07 . 23

## பொன்னர் வன்னியசிங்கம்
## (லாலா சோப் உரிமையாளர் - அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் வன்னியசிங்கம் 2023.07.23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெள்ளைக்குட்டி பொன்னர், பொன்னர் - பொன்னி ஆகியோரின் அருமை மகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் பொன்னு பரமகுருவின் அன்பு சகோதரனும் மாணிக்கம் தங்கம்மாவின் அன்பு மருமகனும் விஜயபாலா, விஜயராஜ், விஜயதர்சினி, விஜயபாரதி, அர்ஜ்னன்(வேலு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமாரினி, யசோதா, சுபதாசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பதுசன், விதுர்சன்(பொவி), விதுசனா, திரிஷா, விதுசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 2023.07.27 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராஜ வீதி,
யூனியன் இராணுவ முகாம்
அருகாமையில்,
அச்சுவேலி.

தகவல்:குடும்பத்தினர்
077 66 68 183
077 18 800 17

(16517)

# மரண அறிவித்தல்



மலர்வு 20 . 01 . 1937

உதிர்வு 23 . 07 . 2023

## திருமதி இராசமணி கிருஸ்ணபிள்ளை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி கிருஸ்ணபிள்ளை அவர்கள் கடந்த (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து கிருஸ்ணபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் தோப்பு, அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருமதி சோதிப்பிள்ளை சோமசுந்தரம் அவர்களின் அன்புச் சகோதரியும் கிருபானந்தா(சுவிஸ்), சந்திரவதனா(ஜேர்மனி), கிருஸ்ணரஞ்சினி (ஜேர்மனி), கிருஸ்ணவேணி(ஆசிரியர் - இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), கிரிதரன் (ஜேர்மனி), கிருஸ்ண்குமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயமாலினி, பூவேந்திரநாதன், திருநாவுக்கரசு, வள்ளுவதாசன் (காசாளர் - யாழ். பல்கலைக்கழகம்), வினோபா, செந்தில்குமரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிரீசன், பிரியங்கன், ஹம்சானந்தி, ஆனந்தபைரவி, சகானந்தி, திசாந், கபிலன், வாகீசன், சுபத்திரன், அச்சயன், விசாகன், கீர்த்திகன், ஆதிகன், சுரபி, மேகவி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.07.2023) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கருணாகரப்பிள்ளையார்
கோவில் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்
திருமதி கிருஸ்ணவேணி வள்ளுவதாசன்(மகள்)
074 35 25 201

(16519)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தம் குறித்து மக்கள் வாக்கெடுப்பு நடத்துங்கள்

## ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

**13 ஆவது திருத்தம் குறித்து மக்கள் வாக்கெடுப்பு நடத்துவது முரண்பாடற்ற, நிலையான தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் என மக்கள் பேரவையின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**

அரசியல் களத்தில் தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிவிலகியதை தொடர்ந்து இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். ஆகவே, அவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கிய மக்களாணைக்கு அமைய செயற்பட வேண்டும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. தேசிய பொருளாதாரம், சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவற்றை பாதுகாப்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம் என பொதுஜன பெரமுனவினர் குறிப்பிடுகிறார்கள்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தினால் தென்னிலங்கையில் வீண் முரண்பாடுகள் தோற்றம் பெறும். நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்குக்கு பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் இல்லாத பிரச்சினைகளை தோற்றுவிப்பதை ஜனாதிபதி தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை எவ்வாறு ஜனாதிபதி அமுல்படுத்துவார் என்பதை நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் மக்களாணை கிடையாது. ஆகவே, 13 ஆவது திருத்தம் தொடர்பில் நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும். அதற்கு மக்கள் வாக்கெடுப்பு நடத்துவது அத்தியாவசியமானது.



மக்கள் வாக்கெடுப்பு ஒன்று நடத்தினால் முரண்பாடற்ற நிலையான தீர்வினை பெற்றுக் கொள்ளலாம். அதனை விடுத்து மக்களாணை இல்லாத தரப்பினர் எடுக்கும் தீர்மானம் நாட்டில் முரண்பாடுகளை மாத்திரமே தோற்றுவிக்கும். 13 ஆவது திருத்தம் தொடர்பில் அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களை அவதானித்துக் கொண்டிருக்கிறோம் என அவர் தெரிவித்தார். (நி-5)

# மசகு எண்ணெய்யின் விலை மீண்டும் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை தொடர்ந்தும் அதிகரிப்பை பதிவு செய்து வருகின்றது.

இதன்படி பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 82.79 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அத்துடன் டபிள்யூ. டி. ஐ. ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலையும் அதிகரிப்பை பதிவு செய்து 78.84 அமெரிக்க டொலராக ஆக பதிவாகியுள்ளது கடந்த ஜூன் மாதம் முதல் மசகு எண்ணெய்யின் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# அநேகமான மீனவர்கள் நீச்சல் திறன் அற்றவர்கள்

## உயிர் காப்பு சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அநேகமான மீனவர்கள் நீச்சல் திறன் அற்றவர்கள் என இலங்கை உயிர்காப்பு சங்கம் தெரிவித்துள்ளது.

அநேகமான மீனவர்கள் தங்களால் நீந்த முடியும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர்.

எனினும் கடலில் அவர்களின் உயிர்களை காப்பாற்றும் அளவிற்கு அவர்களிடம் நீச்சல் திறமை இல்லை என இலங்கை உயிர்காப்பு சங்கத்தின் தலைவர் அசங்க நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

மீனவர்களிற்கு தொடர்ச்சியாக பத்து நிமிடங்களிற்கு 200 மீற்றர் நீந்தக் கூடிய திறன் அவசியம். இதுவே சர்வதேச தராதரம் என குறிப்பிட்டுள்ள அவர் உயிர்காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்களிற்கு ஆறு நிமிடங்களில் 200 மீற்றர் நீந்தக்கூடிய திறன் அவசியம்.

ஆழ்கடல் போன்றவற்றில் உயிர்காக்கும் பணிகளில் ஈடுபடுபவர்கள் ஒன்பது நிமிடங்களில் 400 மீற்றர் நீந்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேரிடர் முகாமைத்துவ நிலையம் வழங்கியுள்ள உயிர்காக்கும் அங்கிகள் சிறந்த தரத்திலானவை. ஆனால் மீனவர்கள் எவரும் அவற்றை பயன்படுத்துவதில்லை. அவர்கள் எந்த கடலிலும் தங்களால் நீந்த முடியும். உயிர்காக்கும் அங்கிகள் அவசியமில்லை என கருதுகின்றனர் எனவும் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நாளாந்தம் மூவர் கடலில் மூழ்கி உயிரிழக்கின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

உலகளாவிய காலநிலை தாக்கத்தால்

# உணவுப் பொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்படலாம்

## இறக்குமதியாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கலாம் என பொருட்களின் இறக்குமதி யாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகளாவிய காலநிலை தாக்கத்தால் உணவுப் பற்றாக் குறை ஏற்படுகிறது.

கடந்த சில வாரங்களாக ஆசிய கண்ட நாடுகளில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளம் மற்றும் வறட்சியால் இந்த நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியா, சீனா, பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற நாடுகள் கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, பெருமளவிலான பயிரிடப்பட்ட நிலத்தில் எதிர்பார்க்கப் படும் மகசூல் இழப்பு குறித்து உலக உணவு அமைப்பு கவன த்தையும் ஈர்த்துள்ளது.

இதன் காரணமாக இந்தியா ஏற்கனவே அரிசி ஏற்றுமதியை நிறுத்தியுள்ள நிலையில் வெங்காயத்தின் விலையும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், அடுத்த இரண்டு, மூன்று மாதங்களில் உருளைக்கிழங்கு, பட்டாணி, வெங்காயம், மிளகாய், மசாலாப் பொருட்களின் விலை உயரும் அபாயம் உள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். (நி-5)

# ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்விலை 323.03 ஆகவும் விற்பனை விலை 336.16 ஆகவும் பதிவாகியுள்ளது.

மத்திய வங்கியினால் அறிவிக்கப்பட்ட நடுத்தர மாற்று வீதம் 329 ரூபாவாகும். அதேவேளை பெப்ரவரி 24 ஆம் திகதி டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 362.66 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சிறிய ஓய்வு கற்றல் ஆற்றலை மேம்படுத்தும்

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் மற்றும் யாழ்.மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களுக்கிடையில் கடந்த ஜூன் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில், ஜூலை மாதம் தொடக்கம் தரம் 1 முதல் 9 வரையான மாணவர்களுக்கு வெள்ளிமற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புக்கள் நடத்தப்படக் கூடாது என தீர்மானம் எட்டப்பட்டது. குறித்த விடயம் தற்போது பேசுபொருளாக மாறியுள்ள நிலையில், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் தனது கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார். (ஆ-ர்)



வாழ்நாள் பேராசிரியர், பொன்.பாலசுந்தரம்பிள்ளை, முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

ஒரு கிழமையில் 5 நாட்கள் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், ஏழு நாட்கள் தனியார் கல்வி நிலையங்களிலும் கல்வி பயில்கின்றனர். மேலும் வீட்டில் இரவிலும் நீண்டநேரம் கல்வி கற்கும் நிலைக்கு பலர் உட்பட்டு இருக்கின்றனர்.

கிழமையில் ஒருநாள் ஓய்வு என்பது உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும். கிழமையில் ஒருநாள் ஓய்வு என்பது அடுத்து வரும் கிழமையில் சிறப்பாக புத்துணர்ச்சியுடன் வேலை செய்வதற்கான ஓய்வு ஆகும். ஓய்வில்லாமல் ஒரே யடியாகத் தொடர்ந்து வேலை செய்தால் வேலையில் வினைத்திறன் குறைந்து விடும் என்பதே உண்மை.

இந்நிலையில் நாட்டின் கல்வி, பரீட்சைகளின் போட்டித் தன்மை, பாடசாலை/பல்கலைக்கழக அனுமதிகளை கருத்திற் கொண்டு ஆண்டுகள் 10,11,12,13 வகுப்பு மாணவர்களிற்கு தற்போதுள்ள நடைமுறையில் தனியார் கல்வி நிலையங்கள் இயங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளில் குறித்த சில பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாமையாலும் கடந்த காலங்களில் கொவிட் போன்ற காரணிகளாலும் பாடசாலைகள் ஒழுங்காக இயங்காததாலும் தனியார் கல்வி மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. தனியார் கல்வி நிறுவனங்கள் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டிருப்பதுடன், ஒழுங்கான முறையில் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிற்கு கல்வி புகட்டி வருகின்றன. இந்நிலையில் ஐந்தாம் வகுப்பு மாணவர்களும் கடும் போட்டிப்பரீட்சைக்கு தயாராக வேண்டிய நிலையில் அவர்களையும் கவனத்தில் கொள்வது நல்லது.

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 9 வரையான மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் அரைநாளாகவும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஓய்வு நாளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நாட்களில் பிள்ளைகள் ஆலயங்களிற்குச் சென்று சமய வழிபாடுகளிலும் வீடுகளில் தம் பெற்றோர், சகோதரர்களுடன் ஒன்றாக உணவருந்தி, உரையாடி மகிழ்வாக இருப்பதிலும் நேரத்தைச் செலவிடலாம். தமக்கு விருப்பமான பொழுதுபோக்குகளிலும் ஈடுபடலாம். "All Work and no play Makes Jack a dull boy" என்பது இவ் விடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

ஒரு பிள்ளையின் ஓய்வு என்பது அவர்களின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துமே அல்லாமல் பின்தள்ளாது.

கல்வி நிறுவனங்கள் கிழமையில் இரு நாட்கள் லீவு விடுவதும் தவணை லீவு விடுவதும் கல்விச் செயற்பாட்டை சிறப்பாக முன்னெடுக்கவே அல்லாமல் பின்தள்ளுவதற்கல்ல.

இதனால் மேதுநூதல் இன்று பாடசாலைக் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வியையும் அவர்களது உடல், உள, ஆரோக்கியத்தையும் முன்னெடுக்க நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகள் நன்மை தரும் எனக் கருதுகின்றேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியது இந்தியா




இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதும் 2 ஆவது டெஸ்ட் போட்டி டிரினிடாடில் நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பவுலிங் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 438 ரன்களுக்கு ஓல் அவுட்டானது.

இதையடுத்து, வெஸ்ட் இண்டீஸ் அணி தனது முதல் இன்னிங்சில் களமிறங்கியது. பிராத்வெய்ட் 75 ரன்கள் எடுத்தனர். அலிக் 37 ரன்னும் சந்தர்பால் 33 ரன்னும் மெக்கென்சி 32 ரன்னும் எடுத்தனர். மழை குறுக்கிட்டதால் ஆட்டம் சிறிது தடைப்பட்டது. 3 ஆம் நாள் முடிவில் வெஸ்ட் இண்டீஸ் 5 விக்கெட் இழப்பிற்கு 229 ரன்கள் எடுத்துள்ளது. இந்நிலையில், நான்காம் நாள் ஆட்டம் தொடங்கியது. சிராஜின் பந்துவீச்சில் வெஸ்ட் இண்டீஸ் வீரர்கள் விரைவில் அவுட்டாகினர். இறுதியில், வெஸ்ட் இண்டீஸ் அணி முதல் இன்னிங்சில் 255 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. இதன் மூலம் இந்திய அணி 183 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது. இந்தியா சார்பில் சிராஜ் 5 விக்கெட்டும், முகேஷ்குமார், ஜடேஜா தலா 2 விக்கெட்டும் அஸ்வின் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். தொடர்ந்து, இந்திய அணி தனது 2 ஆவது இன்னிங்சை தொடங்கியது. இதில், ரோகித் சர்மாவும் யாஷ்வி ஜெய்ஸ்வாலும் ஆட்டத்தை தொடங்கினர்.

ரோகித் சர்மா அரை சதம் அடித்து 57 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஜெய் ஸ்வால் 38 ரன்களில் ஆட்டமிழந்தார். இந்திய அணி 2 ஆவது இன்னிங்சில் 15 ஓவர்க்ளில் 2 விக்கெட் இழப்பிற்கு 118 ரன்கள் எடுத்து மொத்தம் 301 ரன்கள் முன்னிலையில் இருந்த போது மழை மீண்டும் குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. மீண்டும் ஆட்டம் தொடங்கிய போது, சுப்மன் கில் மற்றும் இஷான் கிஷன் ஆகியோர் களமிறங்கி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இதைத் தொடர்ந்து, இந்திய அணி 24 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 181 ரன்கள் எடுத்திருந்த போது டிக்ளேர் செய்வதாக அறிவித்தது. அப்போது, வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு 365 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையில், களமிறங்கிய வெஸ்ட் இண்டீஸ் அணி சார்பில் பிரீத்வொயிட் மற்றும் சந்தர்பால் ஆகியோர் விளையாடினர். 4 ஆம் நாள் ஆட்டநேர முடிவில் வெஸ்ட் இண்டீஸ் அணி 32 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 76 எடுத்திருந்தது. வெஸ்ட் இண்டீஸ் அணி வெற்றி பெற இன்னும் 289 ரன்கள் தேவை இருந்தது.

இந்நிலையில், வெஸ்ட் இண்டீஸ் அணி தனது ஆட்டத்தை தொடங்கியது. களத்தில் சந்தர்பவுல் மற்றும் பிளாக்வுட் இறங்கினர். ஆனால், அங்கு தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஆட்டம் தாமதமாக தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மழை இடைவிடாமல் பெய்து வருவதால் 5 ஆம் நாள் ஆட்டமான இன்றைய போட்டி டிராவில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2 ஆவது டெஸ்ட போட்டி டிராவில் முடிந்த நிலையில், தொடரை 1-0 என்ற கணக்கில் இந்திய அணி வென்றது. (4)

# தேசிய கராத்தே போட்டியில் வவுனியாவிற்கு 19 பதக்கங்கள்




தேசிய கராத்தே சம்மேளனத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான மாவட்ட ரீதியிலான தெரிவுப் போட்டி கிளிநொச்சி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்தது.

இதில் 22 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் நிப்பான் கராத்தே சங்கம் 8 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 1 வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நிப்பான் கராத்தே சங்கம் 4 தங்கப் பதக்கங்கள் மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளது. வவுனியா மாவட்ட ரீதியில் 12 தங்க பதக்கங்களையும் 2 வெள்ளிப் பதக்கங்களையும் 5 வெண்கல பதக்கங்களையும் பெற்று கொண்டுள்ளது.

வெற்றி பெற்ற சாதனையாளர்களுக்கு ஞா.ஞான கீதன் ஆசிரியர் பயிற்றுவித்திருந்தார். (4-299)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2873

**நிரஞ்சலா**

Sorry ன்னு மனிதன் சொன்னால் சண்டை ஓவர்...



Sorry ன்னு டாக்டர் சொன்னால் மனிதனே ஓவர்...

**தீபன்**




**நிலானி**

அப்பா:- என்னம்மா சாம்பார்ல உப்பு இல்லை... ரசத்தில புளி இல்லை... சாதம் சரியா வேகவே இல்லை...



மகள்:- அப்பா என்னைப் பார்க்க வந்தீங்க பார்த்துட்டு போங்க... சும்மா என் வீட்டுக்காரரை குறை சொல்ற வேலை எல்லாம் வைச்சுக்காதீங்க...

**டிபிஷா**

இப்படி ஒரு வாத்தியார் இருந்தா லீவே போடாம பள்ளிக்கூடம் போவேனே.



**றொஷான்**

சண்டே ஆனா ஆடு, கோழி, மீன் கறியே தான் வேணுமோ? இந்த சிங்கம், புலி, சிறுத்தை கறியெல்லாம் சாப்பிட வேண்டியது தானேன்னு சிரிச்சிட்டே ஒருத்தர் கேட்டார்...

நீங்க ஏன் கரட், தக்காளி, உருளைக்கிழங்கு, கத்தரிக்காயையுமே சாப்பிடுறீங்க? அரளிக்காயை சாப்பிட வேண்டியது தானேன்னு நானும் சிரிச்சிட்டே சொன்னேன்... அவர் மொறச்சிட்டே போறாரு...

**ரஞ்சினி**

என்னங்க.. நேற்று ரி.வில வலதுசாரி... இடதுசாரி என்று சொன்னாங்க...



அதுல ஒரு சாரி வாங்கி கொடுங்களேன்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயரில் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தனைத் தரிசித்தார் பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி

(யாழ்ப்பாணம்)

பாப்பரசர் பிரான்சிஸின் இல ங்கைக்காக பிரதிநிதி அதி விந்தனைக்குரிய கலாநிதி பிறாயன் ஊடகவே மூன்று நாள் அப் போஸ்தலிக்க விஜயமாக யாழ்ப்பாண மறைமாவட்டத்துக்கு வருகை தந்து யாழ்ப்பாண மாவ ட்டத்தில் பல் வேறு இடங்களுக்கும் விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் நேற்று நல்லூர் ஆலயத்திற்கு வருகை தந்து நல்லூர் கந்தனை தரிசித்தார்.



மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக நான் ஒரு கிறிஸ்தவனாக இருந்தாலும் நல்லூர் கந்தனை வழிபடுவதற்கு வருகை தந்தேன் என இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதி நல்லூர் ஆலய முன்றலில் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (4-5-33)

# நடப்பாண்டில் இதுவரை 55 ஆயிரம் டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 55 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று வரை மொத்தம் 55 ஆயிரத்து 49 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மொத்த இறப்புகளின் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் 52 பிரதேசங்கள் டெங்கு அபாயம் உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதிகளவான நோயாளிகள் குறிப்பாக 11,929 பேர் கம்பஹாவில் பதிவாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வருடம் மே மாதத்தில் 9,916 டெங்கு நோயாளர்களும் ஜூன் மாதத்தில் 9,916 நோயாளர்களும் இந்த மாதத்தில் மொத்தம் 5,729 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-5)

# வெலிக்கடை படுகொலையின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு

(கரணவாய்)



குட்டிமணி, தங்கத்துரை உட்பட வெலிக்கடைச் சிறையிலே படுகொலை செய்யப்பட்ட 40 பேரின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வல்வெட்டித் துறையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் வல்வெட் டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினர் சதீசும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார். (4-5-60)

# இலங்கை-இந்தியா இடையே பாலம்; எதிர்ப்பு வெளியிட்ட பொன்சேகா

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இதற்குப் பதிலாக மக்களுக்கு மூன்று வேளை உணவு வழங்குவது போன்ற நாட்டின் முக்கிய பிரச்சினை களுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் உள்ளக அரசியல் குறித்து கருத்து வெளியிட்ட சரத் பொன்சேகா, பாலத்தால் ஏற்படக் கூடிய தீங்குகள் குறித்தும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

கண்மூடித்தனமாக வளர்ந்த நாடுகளின் கருத்துக்களை பின்பற்ற வேண்டாம் என்றும் அதற்கு பதிலாக நாட்டில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# 9 தமிழக மீனவர்களுக்கு 9 வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 9 தமிழக கடற்றொழிலாளர்களை யும் எதிர்வரும் 9 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கு மாறு ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு தமிழக கடற்தொழிலாளர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர், தமிழக கடற்தொழிலாளர்களின் 2 படகையும் அதிலிருந்த 9 பேரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து விசாரணைகளுக்கு பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை திணைக்களத்தினர் ஊடாக நேற்று செவ்வாய்க்கிழமை 9 கடற்றொழிலாளர்களையும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை, அவர்களை எதிர்வரும் 9ஆம் திகதி வரை யில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. (4-5-33)

# முட்டைக்கு விதிக்கப்பட்டிருந்த நிர்ணய விலை நீக்கம்

(கொழும்பு)

முட்டைக்கு விதிக்கப்பட்டிருந்த நிர்ணய விலை நீக்கப்படுவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

ஏற்கனவே வெள்ளை முட்டைக்கு 44 ரூபாவும் சிவப்பு முட்டைக்கு 46 ரூபாவும் நிர்ணய விலையாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இறக்குமதி செய்யப்பட்ட முட்டையை சந்தைக்கு விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், போட்டித் தன்மையில் விலையை தீர்மானிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-5)

# இராசிபலன்

26.07.2023
ஆடி 10, புதன்கிழமை
அட்டமி முற்பகல் 11.26 மணிவரை
சுவாதி முன்னிரவு 09.35 மணிவரை

சுபநேரம்-4.32-06.02 மணிவரை
இராகுகாலம்-12.02-01.32 மணிவரை
சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை
சந்திராஷ்டமம்- ரேவதி, அச்சுவினி.

வளவன்




மேஷம்

புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




கடகம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.




துலாம்

எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், பயணங்கள் கைகூடும்.




மகரம்

நீண்டநாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும், தேக நலனில் தெளிவு பிறக்கும்,



ரிஷபம்

எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்திகரமானதாக அமையும்.




சிம்மம்

உறவினர் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சிறப்பான நாள்.




விருச்சிகம்

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல் வந்து சேரலாம், கௌரவமான நாள்.




கும்பம்

நண்பர்களின் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது. உடல் நலனில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.




மிதுனம்

நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வாகன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுக முண்டு.




கன்னி

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உடல்நலன் சீராகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும்.



தனுசு

நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், பொது வாழவில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.



மீனம்

வழிபாடு ஆனந்தம் தரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

புத்தகங்கள் சிந்தனைக்கு விருந்தாகும் புனிதப் பொருட்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் நியமனத்திற்கு எதிராக

# வேலணை மத்திய கல்லூரியில் நேற்றும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வேலணை மத்திய கல்லூரி புதிய அதிபர் நியமனத்திற்கு எதிராக பாடசாலை மாணவர்களால் நேற்றும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வேலணை மத்திய கல்லூரி பிரதான நுழைவாயில் முன்பாக காலை ஒன்று கூடிய மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் - வேலணை மத்திய கல்லூரிக்கு சைவப் பாரம்பரியம் மிக்க அதிபரொருவரை நியமிக்குமாறு கோரி பழைய மாணவர்கள், அப்பகுதி மக்கள் கடந்த 17 ஆம் திகதியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேற்று மதத்தை சார்ந்த ஒருவரை அதிபராக நியமிப்பதற்கு கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதை சுட்டிக்காட்டியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (4-5-33)

# முச்சக்கர வண்டி - பட்டா நேருக்கு நேர் மோதி விபத்து

## வாகனங்கள் கடும் சேதம்



(கரணவாய்)

முச்சக்கர வண்டியும் பட்டா வாகனமும் நேர் எதிரே மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டி தலைகீழாக புரண்டு சேதமடைந்துள்ளது.


நேற்று செவ்வாய்க்கிழமை மந்திகை, மடத்தடி அருகாமையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. நெல்லியடியில் இருந்து மந்திகை நோக்கிச் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியும் மந்திகையில் இருந்து நெல்லியடி நோக்கிச் சென்று கொண்டிருந்த பட்டா வாகனமுமே மோதி விபத்துக்குள்ளானது. பாரிய அளவிலான விபத்து ஏற்பட்ட போதும் ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை. இது தொடர்பில் பருத்தித்துறை போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளார். (4-5-60)



யாழ்ப்பாணம் குருநகர் புனித ஜேம்ஸ் ஆலயத் திருவிழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாப்பரசர் பிரான்ஸிஸ் இலங்கைக்கான பிரதிநிதி வண.கலாநிதி. பிறாயன் ஊடக்கே பங்கேற்றிருந்தனர். (படம்:-சிவசாந்தன், கஜிந்தன்)

# குருந்தூரில் சைவ வழிபாட்டுரிமையை பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும்

## தென்கயிலை ஆதீன குருமுதல்வர்



(முல்லைத்தீவு)

குருந்தூர் மலை ஆதி சிவன் கோவிலின் தொன்மம் வழிபாட்டுரிமை பாதுகாக்க அனைவரும் முன்வாருங்கள் என தென்கயிலை ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அண்மை காலமாக ஆதிசிவன் திருக்கோவில்களின் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு சைவத் தமிழ் தொன்மங்கள் பௌத்த சிங்கள தொன்மங்களாக மாற்றியமைக்கப்பட்டு வருவது வடக்கு கிழக்கில் தொடர்கதையாக உள்ளது.

இந்த வகையில் முல்லைத்தீவு குருந்தூர் மலை ஆதி சிவன் திருக்கோவில் வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டு சிவ வழிபாட்டு தொன்மங்கள் அகற்றப்பட்டு பௌத்த விகாரை நீதிமன்ற கட்டளையை புறந்தள்ளி அமைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களை மிகவும் கவலைக்கு உள்ளாக்கி உள்ளது.

கடந்த வாரங்களில் ஆதி சிவன் கோவில் வளாகத்தில் சைவ வழிபாட்டிற்கு நீதிமன்ற கட்டளையும் மீறி தடை ஏற்படுத்தப்பட்டுள்ள அதே நேரம் இந்த வாரம் சட்டவிரோத கட்டுமான இடத்தில் புத்தருடைய சொரூபம் வைக்கப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கின்றது.

இது இந்த நாட்டின் நீதிமன்ற சுயாதிபத்தை மீண்டும் மீண்டும் கேள்விக்குறியாக்கி உள்ளது.

இந்த நிலையில் அரச கட்டமைப்புக்கள் நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றுவதை, மதிப்பதை நாட்டின் அரச தலைவரான ஜனாதிபதி உறுதிப்படுத்த வேண்டும். அதேபோன்று தொல்லியல் திணைக்கள விவகாரங்களில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

அதேநேரம் நாட்டின் நீடித்த நிலையான சமாதானத்திலும் அபிவிருத்தியிலும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதிலும் பெரும் பங்காற்றும் இந்திய பேரரசு இந்த விவகாரங்களில் தமிழ் மக்களிற்கு குறிப்பாக எமது ஆதிசிவ வழிபாட்டு மரபுரிமைகளை, வழிபாட்டுரிமைகளை பாதுகாக்க இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5-33)

# சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் பழுது

## கடவுச்சீட்டு பெற வரும் மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

கடவுச்சீட்டு பெறுவதற்காக கைவிரல் அடையாளம் வைக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளமையால் மக்கள் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

ஒன்லைன் மூலம் கடவுச்சீட்டினை பெற்றுக் கொள்பவர்கள், கைவிரல் அடையாளம் வைப்பதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில், சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலேயே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் உள்ள இயந்திரம் கடந்த இரு வார கால பகுதிகளாக பழுதடைந்துள்ளது.

அதனால் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் கைவிரல் அடையாளம் வைக்க முடியாத நிலையில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். (4-5-33)



யாழ்ப்பாணம் முகாமைத்துவ கழகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும் பதவியேற்பு விழாவும் கடந்த 17 ஆம் திகதி J Hotels இல் நடைபெற்றது.

# நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி புதிய கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நாளை 27 ஆம் திகதி காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர் ஜி.கிருஸ்ண குமார் தலைமையில் ஆரம்பமாகவுள்ளதுடன் நாளை மறுதினம் மற்றும் 29 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (4-5)

# ஆசிரியர் பற்றாக்குறையுடன் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை

## பெற்றோர்கள் ஆதங்கம்

(அராலி)

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் ஆசிரியர் வளம் பற்றாக்குறை நிலவுவதாக பெற்றோர் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து பெற்றோர் மேலும் தெரிவிக்கையில்,

தரம் ஒன்று வகுப்பிற்கு ஆசிரியர் இல்லை. ஆகையால் தரம் இரண்டில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரே தரம் ஒன்றிற்கும் கல்வியைப் புகட்டுகிறார். இதனால் அந்த ஆசிரியருக்கு வேலைப்பளு அதிகமாக உள்ளது.

அத்துடன் முன்பள்ளியில் கல்வி கற்ற பின்னர் மாணவர்கள் நேரடியாக தரம் ஒன்றிற்கு வகுப்பேற்றமடைந்து செல்கின்றனர். அவர்களது கல்வி மற்றும் ஒழுக்கம் என்பன இங்கேயே ஆரம்பமாகிறது.

இந்நிலையில் தரம் ஒன்று மாணவர்களுக்கு நிரந்தர ஆசிரியர் ஒருவரின் கற்பித்தல் மற்றும் வழிகாட்டல் என்பன இன்றியமையாத ஒன்றாகும்.

கடந்த ஜனவரி மாதம் குறித்த வகுப்பிற்கான ஆசிரியர் இடமாற்றம் பெற்று சென்றதில் இருந்து இதுவரை ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படாத நிலையில் தரம் இரண்டு ஆசிரியரே இரண்டு வகுப்புகளையும் கண்காணித்து வருகின்றார்.

அத்துடன் சுகாதார பாடத்திற்கும் ஆசிரியர் ஒருவர் இல்லாத காரணத்தினால் வெற்றிடம் நிலவுகிறது. இதனால் மாணவர்கள் அந்தப் பாடத்தை கற்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

மேலும் இரண்டு ஆசிரியர்கள் அண்மையில் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளனர்.

இவ்வாறு இருக்கையில் இந்த மாணவர்கள் எவ்வாறு கல்வி கற்பது? கல்வி என்பது மாணவர்களது உரிமை. அது அவர்களுக்கு சரியாக வழங்கப்பட வேண்டும். வேறு பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர் வளங்களை எடுத்து இந்தப் பாடசாலைக்கு வழங்க வேண்டும்.

எனவே வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தை கருத்தில் கொண்டு விரைவில் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

அவ்வாறு ஆசிரியர்களை நியமிக்காத சந்தர்ப்பத்தில் நாங்கள் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு செல்ல வேண்டி ஏற்படும் என தெரிவித்துள்ளனர். (4-5-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஜனாதிபதியை சந்தித்தார் ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆன்ட்ரே பிராஞ்சுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்திக்கான பல முக்கிய விடயங்கள் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இலங்கையின் நிதி தொடர்பான சவால்களை முறியடிப்பதற்கும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் கடன் மறுசீரமைப்பிற்கும் ஐ.நா ஒத்துழைப்பை வழங்கும் என மார்க் ஆன்ட்ரே தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத் திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு கையளித்தார்.

வடக்கு,கிழக்கு மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதும் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதுமே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும் எனவும், அதற்காக எதிர்காலத்தில் நாட்டில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில் புதிய மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதில் இலங்கையும் ஐக்கிய நாடுகள் சபையும் நெருக்கமாக செயற்படவும் இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர். (நி-5)

# தொழிலாளர் பணத்தை கொள்ளையடிப்பதை நிறுத்தக் கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு - புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது பொலிஸாருடன் போராட்டக்காரர்கள் முரண்பட்டதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.



முன்மொழியப்பட்டுள்ள அடிமைத் தொழிலாளர் சட்ட திருத்தங்களை உடன் மீளப் பெறவும் தொழிலாளர்களின் பணத்தை கொள்ளையடிக்க வேண்டாம் என வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இப்போராட்டத்தில் அனைத்து தொழிலாளர் சங்கங்களும் இணைந்துள்ளன.

போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளவர்கள், கடன் மறுசீரமைப்பு திட்டத்தின் பெயரில் தொழிலாளர்களின் பணத்தை கொள்ளையடிப்பதை நிறுத்துமாறு வலியுறுத்தினர். (நி-5)

# பதுளையில் காட்டுத்தீ சுமார் 70 ஏக்கர் நாசம்

(பதுளை)

கடுமையான வறட்சி மற்றும் காற்றுடன் கூடிய வானிலை காரணமாக பதுளை மாவட்டத்தின் பல பகுதிகளில் காட்டுத்தீ சம்பவங்கள் பதிவாகி வருகின்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மரியங்கனை தம்பான மாவரகல வனப் பகுதியில் தொடர்ந்தும் காட்டுத்தீ பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவரையில் 70 ஏக்கருக்கும் அதிகமான வனப் பகுதி தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 400 | 450 |
| தக்காளி | 400 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 250 | 200 | 320 |
| கோவா | 250 | 200 | 250 | 300 |
| கரட் | 400 | 520 | 550 | 600 |
| பூசணி | 140 | 120 | 100 | 150 |
| புடோல் | 140 | 140 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 160 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 150 | 150 |
| பாகற்காய் | 350 | 300 | 450 | 400 |
| வெண்டக்காய் | 200 | 150 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 250 | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 200 | 300 | 250 | 350 |
| கறிமிளகாய் | 300 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 250 | 300 |
| போஞ்சி | 500 | 400 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 120 | 280 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 200 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 100 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 300 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 150 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 170

### வாழ்க்கையை மேம்படுத்தும் வழிகளை நாமே தேர்ந்தெடுக்க வேண்டும்



ஒருவர் ஆற்றங்கரைக்குத் தன் மனைவியை அழைத்துப் போயிருந்தார்.

அவளிடம் ஒரு பையைக் கொடுத்தார். பெரிய பெரிய கற்களைக் காண்பித்தார்.

இந்தப் பையை அந்தக் கற்களால் நிரப்பு என்றார். மனைவி நிரப்பி எடுத்து வந்தாள்.

இதற்கு மேல் நிரப்ப முடியாது என்றாள்.

கணவர் கீழே கிடந்த கூழாங்கற்களில் சிலவற்றை எடுத்தார். அதே பையில் போட்டுக் குலுக்கினார்.

அவை பெரிய கற்களுக்கு நடுவில் இருந்த இடை வெளிகளில் உள்ளே இறங்கின.

ஒரு கட்டத்தில் மேற்கொண்டு கூழாங்கற்களைப் போட இடம் இல்லை.

இப்போதாவது நிரம்பி விட்டதாக ஒப்புக் கொள்வீர்களா ? கேட்டாள் மனைவி.

கணவர் அங்கேயிருந்த மணலை அள்ளிப் பையில் போட்டார். பையை மேலும் குலுக்கினார்.

கற்கள், கூழாங்கற்கள் இவற்றுக்கு இடையில் இருந்த இடைவெளிகளில் மணல் இறங்கியது. இதே பையை முதலில் மணலால் நிரப்பியிருந்தால் பெரிய கற்களுக்கு இடம் இருந்திருக்குமா ? என்று கணவர் கேட்ட போது இருந்திருக்காது என்று ஒப்புக் கொண்டாள் மனைவி.

வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய அன்பு, கருணை, உடல்நலம், மனநலம் போன்ற உன்னதமான விடயங்கள், பெரிய கற்கள் போன்றவை. வேலை, வீடு, கார் போன்ற செல்வங்கள் கூழாங்கற்களுக்குச் சமமானவை.

கேளிக்கை, வீண் அரட்டை போன்ற அற்ப விடயங்கள் இந்த மணல் போன்றவை. முதலில் பெரிய விடயங்களுக்கு வாழ்க்கையில் இடம் கொடுங்கள்.

அதன் பின்னும் சின்னச் சின்ன விடயங்களுக்கு இடம் இருக்கும். ஆனால், உங்கள் வாழ்க்கையை அற்பமான விடயங்களுக்காகச் செலவழித்து விட்டால், முக்கியமான விடயங்களுக்கு இடம் இருக்காது.

நல்லதே நினைப்போம், நல்லதே நடக்கும்.

நல்லதையே செய்வோம், நல்லோராய் வாழ்வோம்.

அன்பு வாசகர்களே!

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## ஒட்டகங்களில் இருந்து மீண்டும் தலைதூக்கும் வைரஸ்

### உலக சுகாதார நிறுவனம் தகவல்



அபுதாபியில் Middle East Respiratory Syndrome Corona virus எம்.ஈ.ஆர்.எஸ் எனப்படும் வைரஸ் தொற்று வகை ஒன்று கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

அபுதாபியில் உள்ள அல் அய்ன் நகரத்தில் இளைஞர் ஒருவரிலே இந்த தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. நோய்த் தொற்றுக்குள்ளான இளைஞருடன் தொடர்பில் இருந்த 108 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் களில் ஒருவருக்குக்கூட நோய்த் தொற்று பரவவில்லை எனவும் முதற்கட்ட பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.

ட்ரோமடரி ஒட்டகங்களிலிருந்து இந்த வைரஸ் பரவியிருக்கலாம் என்று மருத்துவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் குறித்த தொற்றுக்குள்ளான இளைஞன் ட்ரோமடரி ஒட்டகங்களுடன் எந்த தொடர்பும் வைத்திருக்கவில்லை என்பதனால் எப்படி வைரஸ் பரவியிருக்கும் எனவும் சுகாதார அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

அதேவேளை, இந்த எம்.ஈ.ஆர்.எஸ் வகை வைரஸ் ஆனது 2012 ஆம் ஆண்டு முதன் முதலாக சவுதி அரேபியாவில் கண்டறியப்பட்டுள்ளது. அதன் பின்னர் இந்த வைரஸ் ஏறத்தாழ 27 நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வைரஸ் தொற்றினால் இதுவரை சுமார் 2605 பேர் பாதிக்கப்பட்டதாகவும் அவர்களில் 938 பேர் உயிரிழந்துள்ளதாகவும் உலக சுகாதார நிறுவனம் தகவல் வழங்கியுள்ளது. (நி-5)

## அமெரிக்... தென்...

### சர்வதேச ...

(வோஷிங்டன்)—

கொரிய தீபகற்பத்தில் ... இரண்டாவது நீர்மூ... தென்கொரியாவை ... ஏற்படுத்தியுள்ளது.

குறித்த நீர்மூழ்கிக் கப்பல் நேற்று முன்தினம் தென் கொரியாவின் தென்பகுதித் தீவான ஜெஜு துறை முகத்தை சென்றடைந்துள்ளது.

கொரியப் போருக்குப் பின்னர், நாற்பதாண்டுகள் கழித்து முதல் முறையாக கடந்த வாரம் அமெரிக்காவின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் ... யாவுக்... யுஎ... எனும் ... த்த ... பின்ன... தென் ... டைந்த... வட... ஆயுத... கொள்... தொடர்...

## மகனின் இறுதிச் சடங்கின் போது

## 9 குழந்தைகள் உட்பட 13 பேரை சுட்டுக் கொன்ற தந்தை

### கொங்கோவில் அதிர்ச்சிச் சம்பவம்

(கின்ஷாசா)

கொங்கோவில் மகனின் இறுதிச்சடங்கில் உயிரிழந்தவரின் தந்தை 13 பேரை சுட்டு கொன்ற சம்பவம் அதிர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது.

கொங்கோ நாட்டில் நையகோவா என்ற பகுதியைச் சேர்ந்தவர் முகுவா. கடற்படை வீரரான இவரது மகன் திடீரென இறந்து விட்டார்.

இவரது இறுதி சடங்கு நடந்தபோது ஏராளமான உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது திடீரென ஆவேசம் அடைந்த முகுவா தான் வைத்திருந்த துப்பாக்கியால் மகனுடைய இறுதி சடங்கில் பங்கேற்ற கூட்டத்தினர் மீது சரமாரியாக சுட்டார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் உயிருக்கு பயந்து நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 9 குழந்தைகள் உட்பட 13 பேர் சம்பவ இடத்திலேயே குண்டு பாய்ந்து உயிரிழந்ததுடன் பலர் படுகாயம் அடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதுடன் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி-5)

## அமெரிக்காவிடம் இருந்து அதிநவீன விமானங்களை கொள்வனவு செய்யவுள்ள அவுஸ்திரேலியா

(கன்பரா)

அமெரிக்காவிடம் இருந்து சுமார் ரூ.54 ஆயிரம் கோடி மதிப்பிலான 20 புதிய சி-30 ஹெர்குலஸ் விமானங்களை அவுஸ்திரேலியா வாங்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

4 என்ஜின்கள் கொண்ட இந்த ஹெர்குலஸ் விமானங்கள் எதிர்வரும் 2027 ஆம் ஆண்டில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்மூலம் அவுஸ்திரேலிய கடற்படை மற்றும் விமானப்படைக்கான திறன், இயக்கம் போன்றவற்றில் பெரிய முன்னேற்றம் ஏற்படும் என அந்த நாட்டின் பாதுகாப்புதுறை அமைச்சர் பாட் கான்ராய் தெரிவித்துள்ளார். (நி-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ிக்காவின் 2 ஆவது நீர்மூழ்கிக் கப்பல் கொரியாவை சென்றடைந்தது

## சூழலில் அதிகரிக்கும் பதற்றம்

**த்தில் நிலவும் பதற்ற சூழ்நிலைக்கு மத்தியில் அமெரிக்காவின் ர்மூழ்கிக் கப்பலான ஒன்- அபோலிஸ் நீர்மூழ்கி கப்பல் வ சென்றடைந்த விடயம் சர்வதேச சூழலில் பதற்றத்தை ு.**



கப்பல் ஒன்று தென் கொரியாவுக்கு அனுப்பப்பட்டது.

யுஎஸ்எஸ் கெண்டக்கி எனும் அமெரிக்காவின் குறித்த கப்பல் 1980இற்கு பின்னர் முதன்முறையாக தென் கொரியாவை சென்றடைந்துள்ளது.

வடகொரியாவின் அணு ஆயுதத் தாக்குதலை எதிர் கொள்வது எப்படி என்பது தொடர்பில், தென்கொரியாவும் அமெரிக்காவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

இந்த தருணத்தில் யுஎஸ்எஸ் கெண்டக்கி கப்பல் மற்றும் தற்போது வருகை தந்துள்ள ஒன்- அபோலிஸ் கப்பல்களின் வருகையானது வட கொரியாவை அமெரிக்கா சீண்டுவதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்க நீர்மூழ்கி கப்பலின் வருகையை எச்சரிக்கும் முகமாக வடகொரியா இரண்டு பொலிக்ஸ்ட்டிக் வகை ஏவுகணைகளை தென்கொரிய கடற்பரப்பில் செலுத்தி தங்கள் வலுவைக் காட்டியுள்ளது.

அதைத் தொடர்ந்தும் கடந்த சனிக்கிழமை தாழ்வாகப் பறந்து இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் சிறு இறக்கை ஏவுகணைகளையும் ஏவியுள்ளது.

இரண்டு தரப்பும் தங்களின் படை பலத்தைக் காட்டிவருவதால், கொரிய தீபகற்பப் பகுதியில் போர்ப் பதற்றம் கூடியுள்ளது.

இந்த சூழலில், அமெரிக்கப் படைக்குச் சொந்தமான யுஎஸ்எஸ், ஒன்- அபோலிஸ் ஆகிய அணுசக்தி நீர்மூழ்கி கப்பல்கள் தென்கொரியாவுக்கு வருகைதந்துள்ளன்.

மேலும் தற்போது வருகைதந்துள்ள நீர்மூழ்கிக் கப்பலானது இதற்கு முன்னர் தென்கொரியா விற்கு வருகைதந்த யுஎஸ்எஸ் கெண்டக்கி கப்பலை போல் இல்லை எனவும் அணு ஆயுதங்களைக் கொண்டது அல்ல என்றும் எதிரித் தரப்பு கப்பல்களை அழிக்கக் கூடியது எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (நி-5)

## இலங்கைத் தமிழர் இந்திய மண்ணில் சைக்கிள் சாதனைப் பயணம்

(டில்லி)

இலங்கை வடமாகாணம் வவுனியாவைச் சேர்ந்த தர்மலிங்கம் பிரதாபன் என்பவர் இந்தியாவில் சாதனை பயணமாக சென்னை முதல் கன்னியாகுமரி வரை சுமார் 3000 கிலோமீற்றர் தூரத்தினை 40 நாட்களில் சைக்கிளில் சுற்றி சாதனை படைக்கும் நோக்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தனது பயணத்தை சென்னை மாநகரின் மெரீனா கடற்கரையில் ஆரம்பித்துள்ளார்.




"மரங்கள் எங்கள் உயிர். மரம் வளர்ப்போம். இயற்கையைக் காப்போம்" எனும் பதாகையை சைக்கிளில் தாங்கிய வண்ணம் தனது இந்தப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்த பயணத்தில் தமிழ் நாட்டின் 38 மாவட்டங்களூடாக பிரதாபன் பயணிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5-299)

## எண்ணெய் தாங்கி வெடித்து சிதறியதில் கர்ப்பிணித் தாய் உட்பட 20 பேர் உயிரிழப்பு



(அபுசா)

நைஜீரியாவின் ஒண்டோ மாகாணத்தின் ஒரேயில் எண்ணெய் தாங்கி வெடித்ததன் காரணமாக 20 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த எண்ணெய்த் தாங்கி வெடித்து விபத்து நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளது.

லாகோஸ் பெனின் விரைவுச் சாலையில் இந்த விபத்து நிகழ்ந்த வேளையில், குறித்த விபத்தினால் தடித்த கறுப்புப் புகையுடன் பாரிய தீ உண்டானது

இந்தத் தீ முழு இடத்திற்கும் பரவிய நிலையில் தீயணைப்பு வாகனங்கள் பல அரசாங்கத்தின் உத்தரவின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு கொண்டு வரப்பட்டதாக கூறப்படுகிறது.

சம்பவ இடத்தில் இருந்த நபர் ஒருவரின் தொலைபேசியினால் ஏற்பட்ட தீப்பொறியால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தின் போது 3 குழந்தைகள் மற்றும் ஒரு கர்ப்பிணித் தாய் உள்ளடங்கலாக 20 பேர் இந்த உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணெய் தாங்கி வெடித்து சிதறிய விபத்து காணொளிகள் சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். (நி-5)

## கனடாவில் காவடி எடுத்த வெள்ளைக்காரர் பலரை வியப்பில் ஆழ்த்திய சம்பவம்

(ஒட்டாவா)

கனடாவில் உள்ள வேல் முருகன் கோவிலில் வெள்ளைக்காரர் ஒருவரின் செயற்பாடு அங்கிருந்தவர்கள் இடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

மாறுபட்ட கலாசார மோகத்தில் திரியும் இக்கால கட்டத்தில் வெள்ளைக்காரர் ஒருவர் இந்துமதத்தின் பெருமைகளை அறிந்து காவடி எடுத்துள்ளமை பலரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.



கனடா - மொன்றியாவில் உள்ள வேல் முருகன் கோவிலில் அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.குறித்த கோவில் உற்சவத்தின் தேர்த் திருவிழா தினமன்று குறித்த நபர் காவடி எடுத்துள்ளார்.

மேலும் பல தமிழர்கள் அங்கு காவடி எடுத்திருந்த நிலையில் வெள்ளைக்காரர் ஒருவர் காவடி எடுத்திருந்தமை பலரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தின உணவு உண்ணாது பட்டினியில் மக்கள்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இன்றைய இக்கட்டுரையின் முக்கிய செய்தி ஆரோக்கியமானதாக இல்லை. தினமும் சராசரியாக உண்ண வேண்டிய உணவினை உண்ணாமலேயே உலகத்தில் மக்கள் பட்டினியில் வாழுகின்ற நிலைமையினை அவதானித்து கணித்து உலக உணவு ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது.

இது எமது நாட்டிற்கு முழுமையாக பொருந்தும். எமது நாட்டில் தவறான அணுகுமுறைகளால் உருவாக்கப்பட்ட பொருளாதார பேரழிவிற்குள் சிக்கி அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் விலைகள் எகிறி கட்டுக்கடங்காத நிலைமைக்கு சென்றதன் காரணமாக ஒருவர் அன்றாடம் உண்ண வேண்டிய உணவினை உண்ணாது குறைந்த ஊட்டச்சத்துடையவராக (Malnutrition) பல்வேறுபட்ட சுகாதார பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகையான துன்பியல் நிகழ்வுகள் வறுமையின் பிடியில் சிக்கி அல்லல்படும் மக்களை மேலும் வதைக்கும் செயலாகும். சாதாரண குடும்பங்களின் பொருளாதாரத்திலும் இது அதீத தாக்கத்தை செலுத்துவதால் மக்கள் உடல் நலிவுற்று இயற்கையான நோயெதிர்ப்பு சக்தியையும் இழந்து விடுகின்றனர். இதன் காரணமாக தொற்று நோய்கள் இலகுவில் இவர்களை விரைந்து பாதிக்கச் செய்கின்றது.

இது உணவுப் பாதுகாப்பு (Food security) மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு (Nutritional Security) என்னும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் எதிர்பார்ப்பிற்கு வந்த புதிதான சவாலாக அறியப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் கடந்த வருடம் 691-783 மில்லியன் மக்கள் பட்டினிச் சாவுக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். இந்நிலை தொடருமாயின் 2030 ஆம் ஆண்டளவில் 600 மில்லியன் மக்கள் பட்டினியால் துவண்டு துன்புறும் துர்ப்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்பட்டு விடுவர்.

சாதாரணமாகவே நாளொன்றுக்கு ஆண் ஒருவருக்கு 2500 கலோரிகளும் பெண் ஒருவருக்கு 2000 கலோரிகளும் தேவைப்படுகின்றன. வயது வித்தியாசம் இந்த சக்தித் தேவையினை முடிவு செய்தாலும் சராசரியாக மனிதனொருவருக்கான சக்தியை உட்கொள்ளாது விட்டால் அவருக்கு ஊட்டச்சத்து பாதிப்பு ஏற்படுகின்றது.

தவிர்க்கக் கூடியதான இந்த நிகழ்வு பல மக்களின் வாழ்வியலில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. உணவு இருந்தாலும் அது அனைத்து மக்களினதும் வயிற்றினை நிரப்பும் நிலையிலில்லை.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



உற்பத்தியாளன் உற்பத்தி செய்த உணவை அவர்கள் நட்டப்படாமல் நுகர்வோருக்கு விநியோக்கிக்கும் முழுமையான கட்டமைப்பு எங்களிடத்திலில்லாதது இந்த வெற்றிடத்திற்கு காரணமாகும். நெல் உற்பத்தி செய்தவன் விற்க முடியாமல் இருக்கும் துர்ப்பாக்கிய நிலைமை இப்போதும் அரங்கேறுகின்றது. அதுவும் வடமாகாணத்தில் கிளிநொச்சியில் சிவப்பு நெல் 70% விளைவிக்கப்படுகின்றது. ஆனால் வெள்ளை நெல் 30% தான் விளைகின்றது.

இங்குள்ள மக்கள் சிவப்பு நெல்லினை விரும்புவதாலும் அதற்கான கேள்வி அதிகமாக இருப்பதாலும் சிவப்பு நெல்லை தெரிந்தெடுத்து விளைவிக்கின்றனர். ஆனால் 20 ஆம் திகதி விவசாய பீடத்தில் நடைபெற்ற விவசாய மாணவர்களுக்கும் விவசாய பெருமக்களுக்குமான கலந்துரையாடலில் விவசாய சம்மேளன பிரதிநிதிகளால் இந்த விடயம் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

சிவப்பு நெல்லுக்கான விலையை நிர்ணயிப்பதில் ஏற்படுத்தப்படும் தாமதம் இதற்கொரு காரணமாக சுட்டிக்காட்டப்பட்டது.

எமது நாட்டில் நெற்பயிரில் மட்டுமல்ல ஏனைய பயிர்களுக்குமான விவசாய உற்பத்திக் கொள்கைகள் (Agriculture Production Policies) காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் மாறும் போது அவர்களது புதியகொள்கைகள் முன்மொழியப்படுவதனால் பயிர்களுக்கான கொள்கைகளும் மாற்றப்படுகின்றன.

இதனால் விவசாய பெருமக்கள் பாரிய அளவில் அவதிப்படுகின்ற நிலை ஏற்படுகின்றது. விவசாயத்தை ஒரு மதிப்பு மிக்க தொழிலாக கௌரவப்படுத்தாத காரணத்தாலும் சந்தைவாய்ப்பு சீரானதாக இல்லாமையாலும் இந்த நிலையென்பதனைத் தாண்டி இந்தத் தொழிலை விட்டு இளையவர்கள் வெளியேறுகின்ற நிலைமையையும் அவ்தானிக்கலாம். இத்தனைக்கும் வெளிநாட்டு மோகம் மற்றும் குடும்பப் பொருளாதார உயர்வுக்காக மக்கள் குறிப்பாக இளையவர்களும் வெளியேறுகின்ற தன்மை அதிகரித்துக் காணப்படுகின்றது. எந்தத் தொழிலிலும் ஆதாயம் ஈட்ட முடியாத நிலையேற்பட்டதனால் இந்த நிலையென ஊகிக்கலாம்.

தற்போது எமது நாட்டில் தனிமனித வருமானம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. தொழிற்றுறையில் ஏற்பட்ட மாற்றங்கள், வேலைவாய்ப்பினை பாதித்திருக்கின்றது. குடும்ப வருமானத்தில் ஏற்பட்ட இந்த நிலைமை குழந்தைகள், பெரியவர்கள் குறிப்பாக கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட அனைவரையும் ஊட்டச்சத்து குறைபாடுள்ளவர்களாக மாற்றியிருக்கின்றது. அனைவருக்கும் உணவு என்னும் பொதுப்படையான கூற்று அடிபட்டுப் போயிருக்கின்றது.

மக்கள் வாங்கி உண்ணக் கூடியளவில் பொருட்களின் விலைகள் இருந்தாலன்றி தின கூலியாக பணிபுரிபவருக்கு கிடைக்கின்ற ஊதியம் அன்றைய பொழுதில் அவரது குடும்பம் முழுமையாக உண்பதற்கு போதாது. இந்நிலையில் மூன்று வேளை சமனான ஊட்டச் சத்தான உணவென்பது பகல் கனவாகவே இருக்கின்றது.

வறுமை நிலையிலிருக்கும் மக்களின் வாழ்வாதாரம் இன்னும் அடிபடுகின்ற நிலைக்குள் வந்தாகிவிட்டது. போரினால் பாதிக்கப்பட்டு பல வழிகளில் குடும்ப உறுப்பினர்களையும் பொருளாதாரத்தையும் தொலைத்து நிற்கும் மக்களுக்கு இந்த தாக்கம் மிகவும் வலி நிறைந்ததாகும். மற்றைய பக்கத்தில் அன்றாடம் தயாரிக்கும் உணவில் மீதியை மக்கள் கழிவாக கழிவுத் தொட்டியிலும் தெருக்களிலும் கொட்டுவதனைக் காணலாம்.

இவ்வாறான மேலதிகமான உணவை சுகாதார முறைப்படி மக்களிடம் பெற்று உணவின்றி தவிக்கும் மக்களுக்கு வழங்க ஏற்பாடுகளை செய்தால் அவர்களின் பசிபோக்க ஏதுவாயிருக்கும்.

இப்போதிருக்கும் இக்கட்டான நெருக்கடி தருணத்தில் குடும்பங்களில் இருக்கும் மேலதிகமாக உணவை சுகாதார முறைப்படி பொதி செய்து உணவின்றி தவிக்கும் குடும்பங்களுக்கு வழங்குவதற்கான பொறிமுறை அவசியம் உருவாக்கப்படல் வேண்டும்.

அதன் மூலமாக உணவின்றி தவிக்கும் மக்களை இனங்கண்டு அவர்களுக்கான உணவைப் பெற ஊக்குவிக்கலாம். இன்னும் உணவு வழங்க விருப்பம் தெரிவிக்கும் பெருமனிதர்களிடமிருந்து இவ்வாறான உணவைப் பெற்று வழங்க உதவி செய்யலாம்.

இதற்காக இணையவழி தொடர்பாடலை உருவாக்கலாம். எதற்கோ பயன்படும் வாட்சப், முகப்புத்தகம் மற்றும் அனைத்து இணையவழி செயலிகள் இந்த இடர்களையும் கடவுளுக்கு செய்யும் சேவைபோன்ற கைங்கரியத்திற்கு உதவிடலாம். சிறுதுளி பெருவெள்ளம். அதிக செலவின்றி உதவி தேவையான மக்களுக்கான சலுகையிலான வகையில் உணவு கிடைக்க வழி செய்ய முடியும்.

சமூகப் பணியாளர்கள், பிரதிபலன் எதுவும் பார்க்காது தொழில் புரியும் அன்பு நெஞ்சங்கள், தொண்டர்கள் என அனைவரையும் ஒன்று திரட்டி அந்தந்த பிரதேசங்களில் உள்ள மக்களுக்கும் அறிவுறுத்தினால் அவர்களை பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றும் நல்ல செயலாக இதனை முன்னகர்த்தலாம். உணவு தினமும் எமக்கு கிடைக்கின்றது என்பது முக்கியமல்ல. உணவின்றி தவிக்கும் மக்களுக்கும் இந்த உணவு போய்ச் சேர வேண்டும் என்பதில் மானுடராக பிறந்ததில் எமக்கு கடமையும் பங்கும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கண்டுகொள்ளாத அரசாங்கம்

# நெற் செய்கையை கைவிடும் நிலையில் விவசாயிகள்!

(தருமபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது சிறுபோக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் நெல்லுக்கான உரிய விலை கிடைக்கப் பெறாத காரணத்தினால் விவசாயிகள் ஏற்கனவே அறுவடை செய்த நெல்லினை விற்பனை செய்ய முடியாதுள்ளதாகவும் சேமித்து வைப்பதற்கான களஞ்சியங்கள் இல்லாத நிலையில் உள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.**



நெல்சந்தைப்படுத்தல் சபையினரும் கடந்தவாரம் 95 ரூபாவிற்கு விவசாயிகளிடமிருந்து 5000கிலோ நெல்லினை கொள்வனவு செய்வதாகவும் கூறினர் ஆனால் இதுவரையில் நெல் கொள்வனவு நடைபெறவில்லை. அத்துடன் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு 40,000 ஆம் ரூபாவிற்கு உரத்தினை பெற்று அறுவடை செய்த நெல்லும் தற்பொழுது பூச்சிகளின் தாக்கத்தினால் பழுதடைந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

இம்முறையாவது உரிய விலையில் விவசாயிகளின் நெல்லினை அரசாங்கத்தினால் கொள்வளவு செய்யப்படாவிடில் விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்படும் என்பதுடன் இனிவரும் காலங்களில் நெற் செய்கையிலிருந்து முற்றும் முழுதாக விடுபட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.(4-5-316)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சாந்திசேவா சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர் வரும் 30 ஆம் திகதி காலை 9 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் சோ. க. தம்பிப்பிள்ளை தலைமையில் இடம்பெறும்.

(4-5-299)

### கிளிநொச்சி பொதுநூலகத்துக்குரிய காணியை

# இராணுவத்திடமிருந்து விடுவிக்கவும்

## சிறிதரன் எம்.பி ஜனாதிபதிக்கு கடிதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித்துறை வளர்ச்சியில் முழுமையான பங்களிப்பை வழங்கக்கூடியதும் இந்த மாவட்டத்தின் அடையாளமாக மிளிரக் கூடியதுமான கிளிநொச்சி மாவட்ட பொதுநூலகத்துக்குரிய காணியை இராணுவத்தினரிடமிருந்து முழுமையாக விடுவிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் சிறீதரனால், ஜனாதிபதியிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டுள்ள எழுத்து. மூலக் கோரிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

, கிளிநொச்சி நகர பொது நூலகம் மற்றும் பொது விளையாட்டு மைதானம் என்பவற்றுக்குச் சொந்தமாக இருந்த 13.5 ஏக்கர் காணி போருக்குப் பின்னர் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்தது. இக்காணியில் 9 பரப்பு காணி பொது நூலகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில், கடந்த 10 வருட கால போராட்டத்தின் விளைவாக அதில் 5 பரப்புக் காணி மட்டுமே தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட நான்கு வருட கால பிரயத்தனங்களின் மத்தியில், கரைச்சிப் பிரதேச சபையின் நிலையான வைப்பிலுள்ள நிதியைப்பெற்று, புதிய நூலகத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரம் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. அனைத்தும் கைகூடியுள்ள போதும், நூலக அமைவிடத்திற்கான காணி முழுமையாக விடுவிக்கப்படாமலுள்ளதால், இவ் வேலைத்திட்டங்களை முழுமைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இக்காணி விடுவிப்புத் தொடர்பில், காலத்துக்குக்காலம் மாற்றம் பெறும் ஒவ்வொரு அரசாங்களின் ஆட்சிக்காலங்களிலும் ஜனாதிபதி, பிரதமர், தொடர்புடைய அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரிடமும் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும் சாதகமான நடவடிக்கைகள் எவையும்மேற்கொள்ளப்படாத நிலையில், இக்காணியை முழுமையாக விடுவிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5-104-316)

# தோணிக்கல் வாள்வெட்டு; தனிப்பட்ட பிரச்சினையே

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(வவுனியா)

வவுனியா, தோணிக்கல் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை இனந் தெரியாத நபர்கள் புகுந்து வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டமையுடன் வீட்டிற்கும் தீ வைத்ததில் இளம் பெண் ஒருவர் உயிரிழந்தமையுடன் பத்து நபர்கள் தீக்காயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடக பேச்சாளர் எஸ்.பி.ருவான் குணசேகர.குறித்த வீட்டில் வசித்து வந்த சிறுமியின் பிறந்தநாள் வைபவம் 22 ஆம் திகதி இரவிலிருந்து இடம்பெற்று வந்துள்ளது. இதன் போது வீட்டிற்கு வருகை தந்த சிலரால் வீட்டிற்கு தீ வைக்கப்பட்டுள்ளமையுடன் வீட்டு உரிமையாளருக்கு பாரிய ஆயுதத்தினால் தாக்கி பலத்த காயங்களுக்கு உள்ளாகினார்.

தனிப்பட்ட பிரச்சனை காரணமாகவே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணையில் தெரிய வந்துள்ளது. வவு னியா பொலிஸாரினால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை இச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.(4-5-250)

### ஹர்த்தாலுக்கு

# யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் பூரண ஆதரவு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதை குழிக்கு நீதி கோரி நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள போராட்டத்திற்கும் பூரண ஹர்த்தாலுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது. ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார், வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் அழைப்பின் பேரில் வெள்ளிக்கிழமை வடக்கு கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தாலை மேற்கொள்வதுடன், அன்றைய தினம் வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மாணவர் ஒன்றியம் பூரண ஆதரவினை வழங்குகின்றது.

ஆகவே சரணடைந்த எங்களது காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டும். அந்த வகையிலே அனைத்து மக்களும் கட்சி பேதமின்றி தமிழ் தேசிய பாதையில் பயணிக்கும் அனைத்து கட்சிகளும் இதற்கு ஆதரவினை வழங்கவேண்டும் என தெரிவித்தார். (4-5-33)

# மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தீர்மானங்களை மீறி மணல் அகழ்வு

## கிளிநொச்சி பொது அமைப்புகள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி, குடமுருட்டி ,முட்கொம்பன் ,குஞ்சுப்பரந்தன் ,நீவில் ஆகிய பகுதிகளில் வயல் நிலங்கள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகள் என்பவற்றில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனை தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் மற்றும் பொது அமைப்புக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றன.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் இந்த விடயம் தொடர்பாக நீண்ட நேரமாக விவாதத்தில் ஈடுபட்டு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆனாலும் இந்த தீர்மானங்கள் எல்லாவற்றையும் மீறி நாளாந்தம் சட்டவிரோதமான முறையில் 40 முதல் 55 கியூப் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு டிப்பர் வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன.

இவ்வாறான மணல் அகழ்வுகள் யாவும் பொலிசாரின் துணையுடன் முன்னெடுக்கப்படுவதாக பகிரங்கமாக மக்கள் பிரதிநிதிகள் பொது அமைப்புக்களால் மேற்படி மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு சட்டத்தின் மூலம் வளங்களை பாதுகாக்க வேண்டிய அல்லது சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அதிகாரிகளின் துணையுடன் இவ்வாறு மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையானது பல்வேறு மட்டங்களிலும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(4-5-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 239





"எனக்குச் சம்மதமாயில்லை. ஒருநாளும் நான் சம்மதிக்கப் போவதுமில்லை.

நீ சம்மதித்து இராஜ்யத்தை மதுராந்தகனுக்குக் கொடுப்பதாகச் சொன்னால் முதலில் உன்னை இந்த வாளால் கண்டதுண்டமாய் வெட்டிப் போடுவேன். பிறகு உன்னைப் பத்து மாதம் சுமந்து பெற்ற உன் தாயை வெட்டிப் போடுவேன். பிறகு உன் தாயைப் பெற்றவனாகிய நானும் என் கையினாலேயே வெட்டிக் கொண்டு சாவேன். என் உடம்பில் உயிர் இருக்கும் வரை இந்தச் சோழ ராஜ்யம் உன்னை விட்டுப் போக விடேன்" என்று அந்த வயோதிகர் கர்ஜித்தபோது, அவருடைய மங்கிய கண்களில் மின்னொளி வீசியது. உணர்ச்சி ஆவேசத்தில் தளர்ந்து போயிருந்த அவர் உடம்பெல்லாம் நடுங்கியது.

பார்த்திபேந்திரன், "அப்படிச் சொல்லுங்கள், தாத்தா! அப்படிச் சொல்லுங்கள்!" என்று கூவிக் கொண்டே ஓடி வந்து மலையமானைத் தழுவிக் கொண்டான். அவனுடைய கண்களில் கண்ணீர் பெருகிற்று.

கரிகாலனும் சற்று நேரம் ஆழ்கடலை நோக்கியவாறு இருந்தான். பிறகு பாட்டனாரைப் பார்த்து, "தாத்தா! தங்களுடைய எண்ணம் அதுவானால் தயக்கம் ஏன்? உடனே படை திரட்டிக்கொண்டு தஞ்சைக்குப் புறப்படுவோம். பழுவேட்டரையர்களையும் மற்றும் அவர்களைச் சேர்ந்த மழுவரையர், சம்புவரையர், முத்தரையர், முனையரையர் எல்லோரையும் ஒரேயடியாக ஒழித்து விட்டுத் தஞ்சைக் கோட்டையைப் பிடிப்போம். மதுராந்தகனைச் சிறையில் அடைப்போம். சக்கரவர்த்தியை விடுதலை செய்வோம். தங்களுடைய ஆசி எங்களுக்கு இருந்தால் போதும். நானும் பார்த்திபேந்திரனும் சேர்ந்தால் எங்களை வெல்லக் கூடியவர்கள் இந்தப் பூவுலகில் யார்? என்று பெருமிதத்துடன் கூறினான்.

"உங்களை போரில் வெல்ல முடியாது உண்மைதான் ஆனால் சூழ்ச்சியும் சதியும் சேர்ந்து எதிர்த்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? படையுடன் நீங்கள் தஞ்சையை நெருங்கும் போதே, பெற்ற தகப்பனுடன் மகன் யுத்தம் செய்ய வருவதாகக் கதை கட்டி விடுவார்கள். அந்த அவமானத்தைத் தாங்காமல் சக்கரவர்த்தி உயிரை விட்டு விட்டார் என்றும் சொல்லி விடுவார்கள். அதை நம்புகிற ஜனங்களும் இருக்கக்கூடும் அல்லவா? அந்த நிலைமையில், நீ தான் என்ன செய்வாய் குழந்தாய். உன் மனமும் தளர்ச்சி அடைந்து விடும். பெற்ற தகப்பனோடு யுத்தம் செய்ய வந்தவன் என்ற பழிச் சொல்லை உன்னால் தாங்க முடியுமா?

ஆதித்த கரிகாலன் தன் செவிகளைப் பொத்திக் கொண்டு, "சிவ சிவா! கேட்கச் சகிக்கவில்லை" என்றான்.

"அதனால்தான் முதலிலேயே நான் சொன்னேன் பெரிய அபாயம் நம்மைச் சூழ்ந்திருக்கிறது என்று"

"உபாயம் என்ன, தாத்தா! உபாயம் என்ன?"

"முதலில் இலங்கைக்கு நம்பிக்கையான ஆள் ஒருவனை அனுப்ப வேண்டும். அனுப்பி, அருள்மொழியை அழைத்து வரச் செய்ய வேண்டும். அவன் போர்க்களத்தை விட்டு, தன் கீழுள்ள போர் வீரர்களை விட்டு, இலேசில் வரமாட்டான். அவன் மனத்தைத் திருப்பி அழைத்து வரக்கூடிய ஆற்றல் உள்ளவன் ஒருவனை அனுப்ப வேண்டும்."

பார்த்திபேந்திரன் முன் வந்து, "ஐயா! நீங்கள் சம்மதம் கொடுத்தால் நானே போய் அழைத்து வருகிறேன்" என்றான்.

"அது கரிகாலன் இஷ்டம் உன் இஷ்டம். ஆனால் போகிறவன் வந்தியத்தேவனைப் போல் சம்பந்தமில்லாத காரியங்களில் தலையிடக் கூடாது.."

"பார்த்தீர்களா? நான் சொன்னேனே?" என்றான் பார்த்திபேந்திரன்.

"வந்தியத்தேவனைப் பற்றித் தங்களுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா தாத்தா?" என்று ஆதித்தகரிகாலன் கேட்டான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முட்டாள் வேலைக்காரன்

(நேற்றைய தொடர்ச்சி)



"என் திட்டம் நல்ல திட்டம் தான். வண்டிக்குத்தான் வலிமை இல்லாமல் போய் விட்டது" என்ற முடிவுடன் வீடு திரும்பினான். நடந்ததை அறிந்த வணிகன், முட்டாளாக இருக்கிறாயே. இப்படி செய்யலாமா? என்று வேலைக் காரனைத் திட்டினான்.

சில நாட்கள் சென்றன. திடீரென்று அந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் வந்து விட்டது.

"தன்னிடம் இருக்கும் இருபத்தைந்து பீப்பாய் எண்ணெயைப் பதுக்கி வைத்தால் நிறைய லாபம் கிடைக்கும்" என்று நினைத்தான் வணிகன்.

உடனே வேலைக்காரனை அழைத்து கடையில் இருக்கும் மண்ணெண்ணெய் எல்லாவற்றையும் இன்றிரவு நம் தோட்டத்தில் பள்ளம் தோண்டிப் புதைத்து விடு யாருக்கும் தெரியக் கூடாது" என்றான்.

வணிகன் சொன்னபடியே, நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டினான் வேலைக்காரன்.

ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலுள்ள எண்ணெயைப் பள்ளத்தில் ஊற்றினான்.

இப்படியே எல்லாப் பீப்பாய்களில் உள்ள எண்ணெயையும் ஊற்றி முடித்தான்.

இப்போது அவன் உள்ளத்தில், "இந்தக் காலிப் பீப்பாய்களை என்ன செய்வது? இது குறித்து முதலாளி ஒன்றும் சொல்லவில்லையே என்ற சிந்தனை எழுந்தது.

"சரி, அவரையே கேட்டு விடுவோம்" என்ற எண்ணத்தில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த வணிகனை எழுப்பினான்.

"ஐயா? நீங்கள் சொன்னபடி மண்ணெண்ணெயைப் பள்ளம் தோண்டிப் புதைத்து விட்டேன் காலி பீப்பாய்களை என்ன செய்வது என்று கேட்டான்.

வணிகனுக்குச் சிறிது சிறிதாக உண்மை புலப்பட்டத் தொடங்கியது. ஐயோ, "மண்ணெண்ணெய் எல்லாம் போச்சே என்று அலறிய வணிகன் அன்றே அவனை வேலையிலிருந்து நீக்கினான்."

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
> – மில்டன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீட்டுப் பணியில் ஈடுபடுபவர்களை பாதுகாக்கின்ற ஏற்பாடுகள் தேவை

வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை செய்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சிறுமி தூக்கில் தொங்கியு நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பேசுபடுபொருளாகியுள்ளது.

அந்த ஏழைச் சிறுமியின் மரணம் மனித நேயம்மிக்க அனைவரையும் பாதித்துள்ளது.

அந்தச் சிறுமியின் மரணத்தைத் தடுத்திருக்க முடியாதா?

கல்லுக்குள் இருக்கக்கூடிய ஈரமேனும் நம் இதயங்களில் இருந்திருந்தால் அந்தப் பிள்ளையும் இந்த மண்ணில் வாழ்ந்திருக்குமல்லவா என்று மனம் சஞ்சலப்படுகிறது.

அதேநேரம் சிறுவர்களை வேலைக்கமர்த்துகின்றவர்களையும் சிறுவர்களை வேலை செய்வதற்கு அனுமதிப்பவர்களையும் நினைக்கும்போது, ஏன்தான் இவர்கள் இவ்வாறாக இருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றும்.

எது எவ்வாறாயினும் வீட்டுப் பணிப் பெண்களாக வேலை செய்பவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் ஒரு முறையான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் தனித்து வீட்டுப் பணிப் பெண்களின் பாதுகாப்பு மட்டுமன்றி, வீட்டு உரிமையாளர்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

பொதுவில் வீட்டுப் பணிக்கென அமர்த்தப்பட்டவர்களில் சிலரால் வீட்டு உரிமையாளர்களுக்கு நட்டமும் ஆபத்தும் ஏற்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன.

ஆக, வீட்டுப் பணிப் பெண்களாக வேலை செய்கின்றவர்கள் தொடர்பிலான விபரங்களை பதிவு செய்வதன் மூலம் இரு தரப்புக்குமான பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

தவிர, சிறுவர்கள் வீட்டுப் பணியில் ஈடுபடுவதும் இதன்மூலம் தவிர்க்கப்படும்.

பொதுவில் தொழிற்சட்டங்கள் நம் நாட்டில் நடைமுறையில் உள்ளதாயினும் அவை நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் மீதே அமுலாகுகின்றன.

மாறாக கூலித்தொழில் மற்றும் வீட்டுப் பணி, நோயாளர் பராமரிப்பு, மகப்பேற்று பராமரிப்பு ஆகிய தனித்த தொழில் முறைமைகளில் தொழிற்சட்டங்கள் இன்னமும் விரிவுபடவில்லை.

எனவே வீட்டுப் பணிப் பெண்களாகப் பணிபுரிகின்றவர்கள் தொடர்பில் பிரதேச செயலகங்களின் மேற்பார்வையின் கீழ் பெண்களின் நலன்சார்ந்த உத்தியோகத்தர்கள் பதிவினை மேற்கொள்வது அல்லது பிரதேச செயலகங்களை அடிப்படையாகக் கொண்டியங்கும் மாதர் அமைப்புகள் மூலமாக வீட்டுப் பணிக்குரிய வேலைவாய்ப்புக்களை இனங்கண்டு அதற்குரிய மனித வளங்களை வழங்குவதற்கு நிறுவனமயப்படுத்தப்பட்ட பொறிமுறை உடனடியாகத் தேவையாகவுள்ளது.

இதுவிடயத்தில் பெண் அமைப்புகள், மாதர் சங்கங்கள் முனைப்புடன் செயற்பட்டு மேற்குறித்த விடயத்தில் ஒரு பொதுவான கட்டமைப்பை உருவாக்க முன்வர வேண்டும்.

ஆகவே இது விடயத்தில் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் கவனயீர்ப்பு இருக்குமாயின், வீட்டுப் பணியில் ஈடுபடும் பெண்களினது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன் வீட்டு உரிமையாளர்களும் அச்சமின்றி வீட்டு பணிப் பெண்களை வேலைக்கமர்த்த முடியும்.

இது வீட்டுப் பணிசார்ந்த வேலைவாய்ப்பையும் கணிசமாக அதிகரிக்கும்.

# ஏமாற்றம் தொடரப்போகின்றது என்றால் 13 ஐ மறந்து வேறு வழிகளை நாடலாம்

## தமிழ் தேசிய கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஏமாற்றமே தொடரப் போகின்றது என்றால், 13வது திருத்தத்தை முற்றுமுழுதாக மறந்துவிட்டு, சாத்தியமான வேறு வழிமுறைகளை அரசியல் ரீதியாக எமது மக்கள் நாட வேண்டி இருக்கும் என தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கட்சி வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ஊடக அறிக்கையில், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழான பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவது பற்றி அரசியல் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தியே தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார்.

பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதை எதிர்க்கும் சகல தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கும், அவர்களுடைய நோக்கம் நிறைவேறுவதற்கான நல்லதோர் சந்தர்ப்பத்தை இந்த பேச்சு வார்த்தைகள் வழங்கப் போகின்றன.

பேச்சுவார்த்தைகளில் எழப்போகும் எதிர்ப்புக்களை காரணம் காட்டி, இந்த விடயம் கைவிடப்படலாம் அல்லது கணிசமான காலத்திற்கு ஒத்தி வைக்கப்படலாம். இல்லையேல், பொலிஸ் அதிகாரங்களை வெட்டிக் குறைத்து, வலுவற்றதாக்கி, வெறும் கண்துடைப்பாக ஒரு சில அதிகாரங்களோடு மாத்திரம், மாகாண பொலிஸ் படையினை நிறுவுவதற்கு சிங்கள கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை எட்டப்படுவதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

தமிழ் மக்களை பொறுத்தமட்டில், 13வது திருத்தத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் எத்தவொரு மீளாய்வுக்கோ அல்லது சமரசத்துக்கோ இடமில்லை. மட்டுப்படுத்தப்பட்ட முறையில் அமைந்திருக்கும் இந்த அதிகாரங்களில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமளிக்க முடியாது.

சிங்கள அரசியல் கட்சிகளும், அவற்றின் தலைவர்களும், எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத ஆட்சேபனைகளின் அடிப்படையில், இந்த விவகாரத்தில் பிடிவாதம் காட்டினால் மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரங்கள் அர்த்தம் அற்றுப் போய்விடும்.

குறுகிய காலத்திற்குள் 13வது திருத்தத்தின் பிரகாரம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தமிழ் மக்களின் இருப்போடும், பாதுகாப்போடும் சம்பந்தப்பட்ட இந்த விடயங்களில் இனிமேலும் ஏமாற்றப்பட தமிழ் மக்கள் தயாரில்லை.

ஏமாற்றமே தொடரப் போகின்றது என்றால், 13வது திருத்தத்தை முற்றுமுழுதாக மறந்துவிட்டு, சாத்தியமான வேறு வழிமுறைகளை அரசியல் ரீதியாக எமது மக்கள் நாட வேண்டி இருக்கும் என்றார். (ம-7)

# சர்வகட்சி மாநாடு அரசியல் நாடகம்

## திஸ்ஸ அத்தநாயக்க

சர்வகட்சி மாநாடு என்பது ஒரு அரசியல் நாடகம் என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சர்வகட்சி மாநாடு உண்மையான நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படும் போது எந்தவொரு கலந்துரையாடலும் வெற்றியளிப்பதாகவும், இது அரசியல் விளையாட்டாகவும் சூழ்ச்சியாகவும் அமையக் கூடாது.

சர்வ கட்சி மாநாட்டிற்கு எமக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையில் எந்த நிகழ்ச்சி நிரல் என்பது குறித்து தெரியாதுள்ளது.

சர்வ கட்சி மாநாட்டிற்கு முன்னர் ஆளும் தரப்பினர் ஒன்றிணைந்து ஒரு நிலைப்பாட்டை எட்டுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்திய விஜயத்தின் பிற்பாடு சகல தேர்தல்களும் அடுத்த வருடத்துக்குள் நடத்தப்படும் என்ற எதிர்பாரப்பு நிலவுகிறது.

சர்வகட்சி மாநாட்டிற்கு சஜித் பிரேமதாச அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும் எந்நோக்கத்திற்காகவென்ற எந்த குறிப்பும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

பல்வேறு காரணங்கள் இதற்கு தெரிவிக்கப்படுகின்றன. நோக்கம் பற்றிய தெளிவு எங்களுக்கு தெரியவில்லை. அவ்வாறு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பானதாக இருந்தால் முதலில் மாகாண சபை தேர்தலை நடத்துமாறு கோருகிறோம்.

ஜனாதிபதியின் செயற்பாடுகளாலேயே ஆறு வருடங்களுக்கும் மேலாக மாகாண சபையின் செயற்பாடுகள் முடக்கிக்கிடக்கின்றன.

இந்தியாவை திருப்திப்படுத்தவும், தமிழ் அரசியல் கட்சிகளை திருப்திப்படுத்தவும் இந்த சர்வகட்சி மாநாடு அமையக் கூடாது என்பதே ஐக்கிய மக்கள் சக்தியினது அபிப்பிராயமாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# ஆளுநரின் மக்கள் சந்திப்பு இன்று நடைபெறாது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் பொதுமக்கள் சந்திப்பு இன்று புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெறாது என ஆளுநர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடமாகாண ஆளுநர் இன்று பி.எஸ்.எம்.சார்ள்ஸ் வவுனியா மாவட்ட அபிவிருத்தி கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வவுனியா செல்லவுள்ளார்.

எனவே பொதுமக்கள் இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் ஆளுநரை சந்திக்க முடியாது என்று ஆளுனரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் இருக்கமாட்டார் என்ற காரணத்தால் மக்கள் வீண் அலைச்சல் அடையக்கூடாது என்ற நோக்கில் இதனை அறிவித்துள்ளார் என ஆளுநரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7,33,104)

## பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் 200 வது ஆண்டு விழா

யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் 200 ஆவது ஆண்டு நிகழ்வையொட்டி எதிர்வரும் 28,29 ஆகிய தினங்களில் கண்காட்சி, பரிசளிப்பு நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இறுதி நாளான 29 ஆம் திகதி சனிக்கிழமை யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளது என பாடசாலை அதிபர் எஸ்.தேவராஜ் தெரிவித்துள்ளார். (4-5)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ் பிரதேசத்தில்** வல்லான், ஆலடிசந்தி, இறுப்பிட்டி, கேரைதீவு, குறிகட்டுவான், மடத்துவெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு சீனோர்-படகுத்துறை காரைநகர், கடற்படைதளம்காரைநகர், காரைநகர் கடற் படைமுகாம், இ.போ.ச டிப்போ- காரைநகர், காரைநகர், களபூமி, பாலக்காடுஅம்மன்கோவிலடி -காரைநகர், தோப்புக்காடு.காரைநகர், ஊரி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** எல்லப்பர் மருதங்கு ளம், ஆசிக்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம், கோவில்குளம் 10ம் ஒழுங்கை, மதுரநகர் கல்நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம், அழகல்ல (தீருவேகம), அளுத்கம, கல்குண்டாமடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

25

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இந்நாணயங்களில் .இருந்து இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிலங்கையில் தமிழர்கள், வாழ்ந்து வந்துள்ளமையும் அவர்களிடையே தமிழ் அரசமரபு தோன்றியிருந்தமையும் தெரிய வந்துள்ளது. சமகாலத்தில் இலங்கையின் பல பிராந்தியங்களில் இனக் குழுத்தலைவர்கள், சிற்றசர்கள், குறுநிலத்தலைவர்கள் ஆகியோரின் ஆட்சி இருந்ததற்கு. நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட 22 பிராமிக் கல்வெட்டுக்களில் "வேள்" என்ற தமிழ்ச் சொல் காணப்படுகின்றது. இச்சொல் சிற்றரசன்; தலைவன்., உயர் அதிகாரி ஆகிய உயர் பதவியில் இருந்தவர்கள் பயன்படுத்திய ஒரு பட்டப் பெயராகும். பேராசிரியர் றோமிலாதபார் வடமொழியில் "ராஜா" என்ற பட்டம் என்ன பொருளைக் குறித்ததோ அதே பொருளை தமிழில் "வேள்" என்ற பட்டம் குறிப்பதாகக் கூறுகின்றார்.

அக்குருகொடையில் கண்டுபிடிக் கப்பட்ட கி.மு 3 ஆம் நூற்றாண்டு. முதல் கி.பி 1 ம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்த நாணயங்கள்



அண்மையில் சங்ககால அரச உருவாக்கம் புற்றி ஆய்வு செய்த கலாநிதி பூங்குன்றன் சங்க காலத்தை ஒத்த வேளீர ஆட்சி சமகாலத்தில் இலங்கையிலும் இருந்ததற்கு பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் "வேள்" என்ற பட்டத்தைச் சான்றாகக் காட்டியுள்ளார்.


இவ்விடத்தில் ஏறத்தாழ இந்நாணயங்களின் சமகால வரலாறு கூறும் மகாவம்சத்தில் துட்டகாமினி மன்னன் அநுராதபுரத்தில் எல்லாள மன்னனை வெற்றி கொள்வதற்கு முன்னர் அவனுக்குச் சார்பாகத் தென்னிலங்கையில் ஆட்சி புரிந்த 32 தமிழ்ச் சிற்றரசர் களை வெற்றி கொள்ள வேண்டி இருந்ததாகக் கூறியிருப்பது சிறப்பாக நோக்கத்தக்கது.

இவ்வாதாரங்கள் சங்க காலத்தின் சமகாலத்தில் இலங்கைத் தமிழரிடையேயும் அரச மரபு தோன்றியிருந்ததை உறுதி செய்வதாக உள்ளன.

இவ்வாறு பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் அவர்கள் கூறியுள்ளார்.

### பத்மாவதியின் நாகா மன்னர்கள் (கி.பி 170-350) காலத்து நாணயங்கள் (காளை மற்றும் பிராமி எழுத்துக்கள்)

அக்குரு கொடையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு 3 ஆம் நூற்றாண்டு. முதல் கி.பி 1 ம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்த நாணயங்கள்




பத்மாவதிநாகர்கள் (Nagas of Padmavati) (கி.பி 170 - 350) பண்டைய மத்திய இந்தியாவில், விதிசா, பத்மாவதி, கந்திப்பூர் மற்றும் மதுரா போன்ற நகரங்களை தலைநகரங்களாகக் கொண்டு நாடாண்ட அரச குலங்களாகும். இவ்அரசர்களின் சிறிய செப்பு நாணயங்களில் முன் பக்கத்தில் ஒரு காளை இடது அல்லது வலது புறமாக முகம் இருக்கக் கூடியதாக உள்ளது. பின்புறத்தில் சில உரைகள் பிராமி எழுத்துக்களில் உள்ளன. இந்நாணயங்களும் அநுராதபுர யுகத்தில் புழக்கத்தில் இருந்தன.

அக்குருகொடையில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள்




பத்மாவதியின்நாகாமன்னர்கள் ( கி.பி 170-350 ) காலத்து நாணயங்கள்



### 8 முதல் 11 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் இலங்கையில் காணப்பட்ட தங்க கஹவனு நாணயங்கள்

இராஜராஜ சோழன் கிபி 990 இல் இலங்கை மீது படையெடுப்பதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே கிபி 8 ஆம் நூற்றாண்டில் அநாமதேய தங்ககஹவனு நாணயங்கள் புழக்கத்தில் இருந்ததாக தெரிகிறது. இந்நாணயங்கள் அல்லது இதை ஒத்த நாணயங்கள் சோழர்கள் தீவில் ஆதிக்கம் செலுத்திய காலகட்டத்திலும் (1017-1070) மற்றும் 1070 இல் சிங்கள சுதந்திரத்தை மீண்டும் நிறுவிய பின்னர் விஜயபாகு I (1055-1110) காலகட்டத்திலும் புழக்கத்தில் இருந்துள்ளன.

இலங்கை : 9-10ஆம்நூற்றாண்டு
தங்கம்வகைI அகாகஹவனு
அகாகஹவனு = 1/8 கஹவனு
(முழு குவளை)



முன்பக்கம்-குபேரன்

பின்பக்கம் மணிகளாலான வட்டத்தினுள் நாகரி எழுத்துக்கள்

8 முதல்11 ஆம்நூற்றாண்டுகாலப்பகுதியில் இலங்கையில் காணப்பட்ட அநாமதேய தங்ககஹவனு நாணயங்கள்

இக் கஹவனு நாணயத்தின் முன்பக்கத்தில் குபேரன் நிற்கிறார். மற்றும் பின்பக்கத்தில் ஆசனத்தின் மீது வைரவா அமர்ந்துள்ளார். இவை மூன்று முக்கிய வகைகள் மற்றும் துணை வகைகளாக கோட்ரிங்டன் எனப்பவரால் வரையறுக்கப்பட்டுள்ளன. கஹவனு வகை I மற்றும் II நாணயங்கள் மிகவும் அரிதானவை. மற்றும் மேல் வலது விளிம்பில் இரண்டு இணையான வளைந்த கோடுகளுடன் கூடிய ஶ்ரீயின் விரிவான வடிவங்கள். எழுத்தின் நுணுக்கம் மற்றும் உடலின் மிகவும் பாவமான கோடுகள் ஆகிய வற்றால் வகைப்படுத்தப்படுகின்றன. கஹவனுவகைI நாணயங்கள் குபேரனின் இடது கையை மார்பகமாக வளைத்து முழங்கையை வெளிப்புறமாக வைத்துள்ளது.

பகுதி நாணயங்களான அட(½), பால(¼), மற்றும் அகா(1/8) ஆகியவை. முழுகஹவனு நாணயத்தின் முன்பக்கத்திலும் பின்புறத்திலும் கையால் பிடிக்கப்பட்ட சின்னங்களைப் பயன்படுத்தி தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

அனைத்து நாணயங்களும் வட்ட வடிவில் உள்ளன. மற்றும் விளிம்பு தட்டையாக உள்ளன.

இலங்கை வகை தங்கம் கஹவனுவின் முன்பக்கம் நிற்கும் உருவம் குபேரன். வேட்டித்தலைப் பாகையால் முடிசூட்டப்பட்டுள்ளார்.

### இந்திய செல்வாக்கின் கீழ் இலங்கை இருந்த காலத்தில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள்

இந்திய செல்வாக்கின் கீழ் இலங்கை இருந்த காலத்தில் புழக்கத்தில் பல நாணயங்கள் இருந்தன. அவை கொங்கு - சிங்கம் வகை. பல்லவரின் சிங்கம் மற்றும் பானை வகை (கி.பி. 668-740). ரணஸ் தாபபுராவின் சௌஹான்கள் (கி.பி. 1275) வெளியிட்ட சிங்க உருவம் கொண்ட நாணயங்கள். இரண்டாம் பாண்டியவம்சத்தின் நிலைக்குத்தாக மீன் உருவ வகை (கிபி. 740 - 909). பாண்டிய செல்வாக்கு கால (கி.பி 824 - 943) காளை மற்றும் மீன்உருவ வகை. சோழர் ஆட்சி மீன் உருவ வகை (கி.பி 920-1210) என வகுக்கலாம். இது பற்றி இங்கு தரப்படுகின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு, கிழக்கு...

விக்கிரமசிங்கவிற்கும் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆன்ட்ரே பிராஞ்சுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதும் இனங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதுமே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்காக எதிர்காலத்தில் நாட்டில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

## 13ஐ அமுலாக்...

ஏனெனில், அது தெற்கு சிங்கள மக்களை பாதிக்கும் என்று தெரிவித்திருந்தோம்.

அதேபோன்று, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் நாம் அவதானம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம்.

எனவே, யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே கட்சி என்ற ரீதியில் எமது நிலைப்பாடாக இருக்கிறது.

இந்தநிலைப்பாட்டுடன், நாம் இன்று இடம்பெறவுள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ள தீர்மானித்துள்ளோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## மத நல்லிணக்க...

சித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி ஆலயத்திற்குள் நாட்டின் ஜனாதிபதி செல்வதாக இருந்தால் கூட மேலாடையை கழற்றி செல்ல வேண்டும் என்பது ஆலய விதிமுறை.

அதற்கமைய நேற்று இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதியுடன் நானும் மேலும் ஒரு குருவும் நல்லூர்க் கந்தனை வழிபடுவதற்கு சென்றிருந்தோம்

உரிய நடைமுறைகளை பின்பற்றி நாங்கள் ஆலயத்தின் முன்றலில் நின்று வணங்கி விட்டு வெளியேறிய போது நல்லூர்க் கந்தசாமி ஆலய நிர்வாகத்தினர் எங்களை மதகுருவின் ஆடையுடன் உள்ளே சென்று வழிபட முடியும் என அழைத்திருந்தார்கள்.

அந்த அழைப்பை ஏற்று ஆலயத்திற்குள் நமது கத்தோலிக்க மத குருவுக்கான ஆடையுடன் சென்று கந்தனை தரிசித்திருந்தோம், எனவே இந்த விடயமானது மத நல்லிணக்கத்திற்கான ஒரு முன்னுதாரணமாகும் மற்றும் மத நல்லிணக்கத்திற்கான ஒரு ஆரம்பப் புள்ளி என கூறலாம்

மேலும் எதிர்காலத்தில் நாங்கள் அனைத்து மத மக்களும் ஒற்றுமையாக இணைந்து செயற்படுவதற்கான ஒரு ஆரம்பப் புள்ளியாக பார்க்கின்றோம் எனவும் தெரிவித்தார். (ம-7,33,104)

## குடும்பஸ்தர்...

விபரீத முடிவெடுத்து குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

யாழ். - கொழும்பு ஹயஸ் வாகன ஓட்டுநராக குறித்த நபர் செயற்பட்டு வந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ஏமாற்று வித்தை...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் பிபில மெதகம தேசிய பாடசாலைக்கு பேருந்து வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியை கலந்துரையாடலுக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார் என்றும், இது சர்வகட்சி மாநாடு என்று அறியக் கிடைப்பதாகவும், தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் இடையே பொது நிகழ்ச்சி நிரல், வேலைத்திட்டம், கருத்து ஒற்றுமை, கூட்டுப் பொறுப்புடன் ஒரு கருத்துடன் செயற்படும் நிலைப்பாடுகள் இல்லை எனவும், நாட்டையும் மக்களையும் பற்றி சிந்தித்து எதிர்க்கட்சி ஒருவேளை இந்த கலந்துரையாடலுக்குச் சென்றாலும், இந்த கலந்துரையாடல் வழமையான அரசியல் ஏமாற்று வித்தை என்று கருதும் பட்சத்தில் அந்நிமிடமே குறித்த கலந்துரையாடல் மேசையை விட்டு வெளியேறும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசாங்கப் பேச்சுவார்த்தை நேர்மையுடன் நடந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும் என்றும், வெற்றிபெற வேண்டுமானால், பேச்சுவார்த்தைகள் தூய்மையான நோக்கத்துடன் நடக்க வேண்டும் என்றும்,

அது அரசியல் ஏமாற்று வித்தையாக இருக்கக்கூடாது என்றும், நாட்டு நலனுக்காக செய்யப்படும் பணியாக பேச்சுவார்த்தை அமையப்பெறுவதாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்திடம் தெளிவான வேலைத் திட்டம் இருக்க வேண்டும் என்றும், இந்த கலந்துரையாடல்களுக்கு தாம் அழைக்கப்பட்ட போதிலும், நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் குறித்து தமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றும், நாட்டுக்கு நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையில் மக்கள் பக்கம் இருந்து எதிர்க்கட்சி இதில் கலந்து கொள்வதாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

அதுடன் இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 134 உறுப்பினர்களுக்கும் இடையில் பல கருத்து முரண்பாடுகள் எழுந்துள்ளன என்றும், கலந்துரையாடலுக்கு வருவதற்கு முன்னர் கருத்து வேறுபாடுகளை சமாளித்து ஒரு நிலைப்பட்ட கருத்தொற்றுமைக்கு வருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

மேலும் நாடு பல மாற்றங்களில் இருந்து மீண்டு வர முயற்சிக்கும் இந்நேரத்திலும்போலி மருந்துகளை கொண்டு வந்து மக்களின் வாழ்க்கையை அழிக்கும் சுகாதார கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதாகவும்,

வங்குரோத்தான நாட்டில் கூட, சுகாதாரத் துறையில் இருந்தும் திருட்டு இடம்பெறுவதாகவும், இவ்வாறானதொரு நிலையில் அரசாங்கம் கலந்துரையாடலுக்கு முன்னர் இந்த தவறுகளை திருத்திக் கொள்ள வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

மக்கள் நலம் பெறவே மருத்துவமனைக்கு வருகிறார்கள் என்றாலும் கடந்த காலங்களில் மருந்துகளால் பல உயிர்கள் பலியாகியுள்ளன என்றும், இது தொடர்பாக எதிர்க்கட்சி தொடர்ச்சியாக மக்களை விழிப்புணர்வூட்டி வந்தபோது எதிர்க்கட்சி மக்களை ஆத்திரமூட்டும் நடவடிக்கையை மேற்கொண்டு வந்ததாக அரசாங்கம் கூறியதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். எதிர்க்கட்சி இவ் விடயத்தில் கவனம் செலுத்தியமையினால்,

சுகாதாரத்துறையில் திருட்டுகள் ஓரளவு குறைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


மெகா பவர் — திகதி 25/07/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1534 — I 19 41 49 53 64 — 17057

லக்கி 7 — திகதி 25.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 012 — L7 இலக்கம் 18 — வெற்றி இலக்கினம் மேடம் — வெற்றி இலக்கங்கள் 8 7 9 1 4 6

தன நிதானய — திகதி 2023.07.25 — சீட்டிழுப்பு இலக்கம் 1216 — S 21 39 43 53 S

கொவிசெத — திகதி 2023.07.25 — சீட்டிழுப்பு இலக்கம் 3428 — S 07 11 42 50 — தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.07.25 — சீட்டிழுப்பு இலக்கம் 495 — கும்பம் 35 49 57 60 கும்பம் — தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத — திகதி 2023/07/25 — சீட்டிழுப்பு இலக்கம் 5186 — C 8 7 0 8 7 3 — தேசிய லொத்தர் சபை

அட கோடீபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — சீட்டிழுப்பு வாரம் 1986 — 2023.07.25 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,073,990/- — 26 58 68 74 T — இரண்டாம் வரம் 07 08 48 59 E — DLB

கப்ருக — திகதி 25.07.2023 — வெற்றி வாரம் 1336 — A 35 04 06 18 42 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.420,795,124.20 — "இரண்டாம் வரம்" 05 14 23 25 X — DLB — தொலைபேசி 011-2 333 546-47 — Web : www.dlb.lk

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3872 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.07.25 — தினம் செவ்வாய்க்கிழமை — 01 05 14 39 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,332,452/- — "இரண்டாம் வரம்" 17 46 52 61 — DLB

சசிரி — 354 — 2023.07.25 — 22 24 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,922,800/- — DLB

சனிதா — திகதி 2023.07.25 — வெற்றி வாரம் 4321 — வர்ணம் பச்சை — 06 23 43 68 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,185,404.00 — "இரண்டாம் வரம்" 17 20 26 31 P — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2160 — வர்ணம் இள நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.07.25 — தினம் செவ்வாய்க்கிழமை — 11 12 32 45 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,281,212.40 — இரண்டாம் வரம் 13 21 37 61 B — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16375)

076 825 7716 (ஆகாஸ்)


# கனடா பிரதமரின் கருத்து

## வெளிவிவகார அமைச்சு நிராகரிப்பு

கனடா பிரதமர் தெரிவித்த கருத்தை இலங்கையின் வெளிவிவகார அமைச்சு நிராகரித்துள்ளது.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடந்த 23 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் இடம்பெற்றுள்ள விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டு வெளிவிவகார அமைச்சு இதனைக் குறிப்பிட்டது.

கனேடியப் பிரதமர் தனது அறிக்கையில் தமிழ் இனப்படுகொலை நினைவு தினம் என்று குறிப்பிட்டுள்ளதை வெளிவிவகார அமைச்சு முற்றாக நிராகரிப்பதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கடந்த கால முரண்பாடுகள் குறித்து, அந் நாட்டின் தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு வெளியிடப்படும் இவ்வாறான பொய்யான அறிக்கைகள் இன நல்லிணக்கத்திற்கு தடையாக இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் ஸ்திரத்தன்மை, முன்னேற்றம் மற்றும் நல்லிணக்கத்திற்கு ஆதரவளிக்குமாறு இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கனடாவிடம் மேலும் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-7)


UK Visa

U.K வீசா Tier 2 - Sponsorship visa

பெறுவதற்கும் அதற்கான தயார்படுத்தலுக்குமான உறுதியானதும் பாதுகாப்பானதுமான சேவைக்கு எங்களை அழையுங்கள்.

NIFCO JAFFNA (16521)

077 324 9078
077 033 3713
077 768 7821


## ஜனாதிபதி...

ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்தில் தாம் பங்கேற்கப் போவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இன்றைய கூட்டத்தில் மாகாண சபை தேர்தல், பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின் பின்னர் சர்வகட்சி கலந்துரையாடலில் பங்கேற்பதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதி தலைமையிலான சர்வகட்சிக் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது. (ம-7)

# கொரியர் சேவை நிலையத்தில் போதைப்பொருட்கள் மீட்பு

இலங்கை சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகள் தொகையொன்றை கண்டுபிடித்துள்ளனர்.

சீதுவை பிரதேசத்தில் அமைந்துள்ள கொரியர் சேவை நிலையமொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது இந்தபோதைப் பொருள் தொகை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

போதைப்பொருள் இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் பேரில் 09 பொதிகள் சோதனைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்தன.

நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவிலிருந்து கொழும்பு, மஹரகம மற்றும் பிலியந்தலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் நபர்களுக்காக இந்தப் பொதிகள் அனுப்பப் பட்டுள்ளன. (ம-7)


யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்
சுன்னாகம்

பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

இடம் பாடசாலை பிரதான மண்டபம்
காலம் 30.07.2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் பி.ப 3.00 மணி
விடயம் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு

இந்நிகழ்வில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(16516)

பாடசாலைச் சமூகம்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்


# முத்தமிழ் விழா மாற்றம்

யாழ். மாநகர சபையினால் எதிர்வரும் 2023.07.28 ஆம் திகதி நடைபெறவிருந்த முத்தமிழ் விழாவானது தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 2023.07.29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ். மாநகர சபை ஆணையாளர் ஆணையாளர் ஜெயசீலன் அறிவித்துள்ளார். (ம-7.33)


WORK IN UK
WORK PERMITS
CIVIL ENGINEERS
CIVIL ENGINEERING சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்த CIVIL ENGINEERING துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்
✔ 5 YEAR WORK PERMITS
✔ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
✔ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)
CIMS COLLEGE 0777-068-777

காணி விற்பனைக்கு

யாழ் மாநகரசபை பகுதிக்குள் ஆறுகால் மடம் தில்லையயல் 2 ஆம் ஒழுங்கையில் 75 3/4 காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
அராலி வீதியூடாகவும் பாதை உண்டு.
பரப்பு ரூபாய் - 15 இலட்சம் முதல் (16507)

077 352 5670
077 894 7293


## இராணுவ...

தொடர்பில் இருநூறு வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு அண்மையில் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி இருந்தார்.

அது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுவிப்பதில் தவறில்லை என்றாலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் தண்டனை பெற்று சிறைக்குச் சென்ற பல இராணுவ வீரர்கள் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு அரசியல் காரணங்களுக்காக சிறையில் இருக்கும் முன்னாள் இராணுவ வீரர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் தாம் பல தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் சிறையில் இருந்ததாகவும் நாமல் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார். (ம-7)

## ஒன்லைன்...

கள், கைவிரல் அடையாளம் வைப்பதற்கு சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலேயே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் உள்ள இயந்திரம் கடந்த இரு வாரங்களாகப் பழுதடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கடவுச்சீட்டுக்காக கைவிரல் அடையாள வைக்க செல்லும் மக்கள் அலைச்சல், நேரவிரயம் போன்ற பல வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ஐ.எம்.எப்...

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் ஸ்ரீ சற்குணராஜா, யாழ் மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரம், பிரதேச செயலாளர்கள், உள்ளிட்ட யாழ் மாவட்டத்தின் உயரதிகாரிகள் பிராந்திய ஊடகவியலாளர்கள் என பல்ர் கலந்து கொண்டிருந்தனர்.

குறித்த நிகழ்வில் புதிய வரிக் கொள்கையின் அவசியம் தொடர்பில் துறைசார் அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டதுடன் இது தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சமரசிங்க சூம் தொழில்நுட்பத்தினூடாக வருகைதந்து தமது கருத்துக்களை முன்வைத்து விளக்கமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=
(16349)
T.P:077 544 8503

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
•கிளிநொச்சி •சுன்னாகம்
•சாவகச்சேரி •மானிப்பாய்
•நெல்லியடி •பருத்தித்துறை
•திருகோணமலை •வல்வெட்டித்துறை
•கோப்பாய் •புத்தூர்
•பண்டத்தரிப்பு •சங்கானை
•கொழும்பு (C-6966)
வயது >30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் 25 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- செம்மண், நன்னீருற்று
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதியிலிருந்து 1km தூரம்
- நிலப்பரப்பு
- ஒரு பரப்பின் விலை ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் (550,000/=)
- நிலாவரை கிணற்றிலிருந்து 2Km தூரம்

076 057 0354,076 826 0354

வேலைவாய்ப்பு

எமது WEC நிறுவனத்தின் புதிய கிளைகளுக்கு, புதிய நபர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

- மேற்பார்வையாளர்
- விற்பனை பிரதிநிதி
- வாகன ஓட்டுநர்
- அலுவலக பிரதிநிதி
- உதவி முகாமையாளர்
- களஞ்சிய காப்பாளர்

தகுதிகாண் காலத்தின்போது 03 - 06 மாத கால பயிற்சி வழங்கப்படும்.
தங்குமிட வசதி வழங்கப்படும்.
பயிற்சிக் காலத்தின்போது கவர்ச்சிகரமான வருமானம் வழங்கப்படும்.
(16520)
தொடர்புகளுக்கு
021 722 3317, 077 028 7429


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.